'கிளீன் கட்'
நவ நாகரிகத்திற்கேற்ப பெண்கள் குழந்தைகளுக்கான உடைகள் குறுகிய காலத்தில் தைத்துக் கொடுக்கப்படும்.
'KLEEN KHUT'
239, Power House Road,
JAFFNA.
Tele: 22823

# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை

விலை ரூ-1/=

'KLEEN KHUT'
* தரமான ரேஸியோ பிரதிகள்
* தெளிவான போட்டோஸ்ரற் பிரதிகள்.
* விரைவான தமிழ், ஆங்கில தட்டெழுத்து வேலைகளுக்கு நாடுங்கள்:
'கிளீன் கட்'
239, மின்சாரநிலைய வீதி யாழ்நகர்.
தொலைபேசி: 22823

சுடர்:- 1 யாழ்ப்பாணம் குரோதன ஞூ கார்த்திகை மீ 20உ வியாழக்கிழமை ஹிஜ்ரி 1406 ற.அவ்வல் பிறை 22 (05-12-1985) UTHAYAN — A LIVELY TAMIL DAILY கதிர்:- 9

# டாக்காவில் ஜே. ஆரிடம் கூட்டணி யோசனைகள்

## ராஜீவ் விவாதித்து அமுல் செய்ய வலியுறுத்துவார்

புதுடில்லி, டிச.4

**ராஜீவ் - ஜே.ஆர் டாக்கா சந்திப்பில் இரு நாட்களுக்கு முன்னர் தமிழர் விடுதலைக் கூட்டணி சமர்ப்பித்த புதிய யோசனைகள் விவாதிக்கப்படும்.**

இலங்கை அரசாங்கம் வெளியிட்ட நகல் செயல் திட்ட யோசனைகளுக்கு, தமிழர் விடுதலைக் கூட்டணி மாற்று யோசனைகளைக் கடந்த மூன்றாம் திகதி இந்தியப் பிரதமரிடம் சமர்ப்பித்திருந்தது.



அந்த மாற்று யோசனைகளை திரு. ராஜீவ் காந்தி, டாக்காவில் வைத்து ஜனாதிபதி திரு. ஜே. ஆர்.ஜெயவர்த்தனவிடம் கையளிப்பார்.

அது குறித்து இருவரும் விவாதிப்பர். அதில் உள்ள யோசனைகளை இலங்கை அரசு செயற்படுத்த வேண்டும் என ராஜீவ் வலியுறுத்துவார்.

தாம் இன்று, இங்கு கூட்டிய எதிர்க்கட்சித் தலைவர்களின் மாநாட்டில் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி இதனைத் தெரிவித்தார்.

இலங்கை இனப்பிரச்சினையைத் தீர்த்து வைக்கும் முயற்சியில் ஓர் அங்கமாகப் பிரதமர் ராஜீவ், டாக்காவில் வைத்து ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனவை இம் மாதம் 7ஆம் திகதி சந்திக்கிறார்.

டாக்காவில் நடக்கும் தென் கிழக்காசியப் பிராந்திய ஒத்துழைப்பு மாநாட்டில் இருவரும் கலந்து கொள்கின்றனர். மாநாட்டின் தொடக்க நாளான 7ஆம் திகதி அவர்கள் தனியாகச் சந்தித்து இனப்பிரச்சினைக்கான தீர்வு குறித்து ஆராய்வர்.

தமிழர் விடுதலைக் கூட்டணி இந்திய வெளியுறவுச் செயலாளர் திரு. ரொமேஷ் பண்டாரியுடனான சந்திப்பின்போது மாற்று யோசனையைச் சமர்ப்பித்தது.

புதுடில்லியில் திரு. ரொமேஷ் பண்டாரியுடனான சந்திப்பில் திரு. அ. அமிர்தலிங்கம், திரு. மு. சிவசிதம்பரம், திரு. ஆர். சம்பந்தன் ஆகியோர் கலந்துகொண்டனர்.



இந்திய நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் எதிர்க்கட்சித் தலைவர்களும், பிரதமரும் இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் இந்தியா உதவுவது குறித்து இன்று கூடி ஆராய்ந்தனர்.

அப்போது பிரதமர் ராஜீவ், தாம் டாக்காவில் இலங்கை ஜனாதிபதியைச் சந்தித்து, பிரச்சினையைத் தீர்க்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தப் போவதாகத் தெரிவித்தார்.

இலங்கையில் இப்போது நடக்கும் கொலைகள் குறித்து அவர் கவலை தெரிவித்தார். இரு சாராருக்கும் இடையில் நம்பிக்கையின்மை வளர்ந்ததே நிலைமை மோசமடைவதற்குக் காரணம் என்றும் பிரதமர் ராஜீவ் தெரிவித்தார்.

இலங்கையில் அரசியல் ஸ்திர நிலை ஏற்பட வேண்டும் என்பதில் இந்தியா அக்கறையாக இருப்பதாகவும் அவர் சொன்னார்.

எல். கே. அத்வானி (பாரதீய ஜனதா), பேராசிரியர் மது தண்டவதே (ஜனதா), இந்திரஜித் குப்தா (இந்திய கம்யூனிஸ்ட்) பிரேந்திர வர்மா (லோக்தள்), ஆலடி அருணா (அ. இ. அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்), கே. பி. உன்னிக் கிருஷ்ணன் (காங்கிரஸ்—எஸ்) அமர் ரோய் பிரதான் (போர்வாட் புளக்), வி. என். சோமு (தி.மு.க.), பி. குவேந்திரா (தெலுங்கு தேசம்), பி. எஸ். ராமுவாலியா (அகாலிதள்) பி. ஜே. கோஸ் (இந்திய மார்க்ஸிட் கம்யூனிஸ்ட்) ஆகியோர் இன்றைய சந்திப்பில் கலந்துகொண்டனர்.

## நனைந்து நனைந்து ஸ்ரேடியத்தில் ரயில் டிக்கெட் வாங்கினர்
### நேற்று மட்டும் ரூ. 24,000 வசூல்

யாழ்ப்பாணம், டிச 5

மழையில் நனைந்தவாறே, கொழும்பு செல்லும் பயணிகள் நேற்று யாழ். ஸ்ரேடியத்தில் கியூவில் நின்று டிக்கெட்டுகளை வாங்கினர்.

ரயில் பயணிகளுக்கு பயணடிக்கெட் வழங்கும் புதிய திட்டம் புதன் முதல் அமுலுக்கு வந்தது.

யாழ்ப்பாணம் ரயில் நிலையத்தில் இருந்து செல்லும் பயணிகள் துரையப்பா விளையாட்டு அரங்குக்கு (ஸ்ரேடியத்துக்குச்) சென்று பணம் கொடுத்து பயண டிக்கெட்டுகளை பெற்றுக் கொண்டனர்.

ஆயுதப்படையினர் அரங்குக்கு வெளியே நின்றனர். விளையாட்டரங்கில் வைத்து 24000 ரூபா வரை பயணிகளிடமிருந்து வசூலானது.

யாழ் ரயில்நிலையத்தில் வைத்து காசுக்கட்டளைகளைக் கொடுத்தும் பயணிகள்பயண டிக்கெட்டுகளைப் பெற்றுக்கொண்டனர்.

அப்படி வசூலான தொகை ரூபா 15,300

வாரண்டுகள் மீது 17,000 ரூபா பெறுமதியான பயண டிக்கெட்டுக்கள் வழங்கப்பட்டன.

## காசுக் கட்டளையும் இல்லை; டிக்கெட்டும் இல்லை
### பயணிகள் திண்டாட்டம்

யாழ்ப்பாணம் தவிர்ந்த ஏனைய ரயில் நிலையங்களில் இருந்து கொழும்புக்குப் பயணம் செய்வோர் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

காங்கேசன்துறை, சுன்னாகம்,கொடிகாமம்ரயில் பயணிகள் பயண டிக்கெட்டுக்களை காசுக் கட்டளை கொடுத்தே பெற்றுக் கொள்ள வேண்டும் என்று புதிய திட்டம் கூறுகின்றது.

ஆனால் கொடிகாமம், சுன்னாகம், காங்கேசன்துறை தபால் நிலையங்கள் பணத்தை வாங்கிக் கொண்டு காசுக்கட்டளைகளை வழங்க மறுக்கின்றன.

இதற்குக் காரணம், தபால் திணைக்களம் விடுத்துள்ள சுற்று நிருபமே, பணம் பெற்றுக் கொண்டு காசுக்கட்டளைகளை வழங்குவதைத் தவிர்க்கும்படி தபாற்கந்தோர்களை அச்சுற்று நிருபம் பணித்துள்ளது.

பாதுகாப்பு காரணங்களை முன்விட்டே இந்த உத்தரவு தபால் நிலையங்களுக்கு அனுப்பப்பட்டு உள்ளது.

### சுபநேரம்

வியாழக்கிழமை
5 - 12 - 1985
சுபநேரம்:
7.47முதல் 9.17வரை
ராகுகாலம்:
1 47 முதல் 3.17 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்
அட்டமி
முன்னிரவு 9.42 வரை

# பேச்சுவார்த்தை பயன் தரும் என்ற நம்பிக்கை இல்லை

## நீண்ட போருக்குத் தயாராகிறோம்
### பிரபாகரன் பேட்டி

பேச்சுவார்த்தை பயன் தரும் என்ற நம்பிக்கை எமக்கு இன்று இல்லை. தமிழ் மக்கள் உறுதியாக இருப்பதால், தமிழ் ஈழம் அடைவதற்குரிய வாய்ப்புகள் பிரகாசமாக உள்ளன. நீண்ட போர் ஒன்றுக்கு தயாராகிக் கொண்டு இருக்கின்றோம்.

தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் திரு. வேலுப்பிள்ளை பிரபாகரன் 'புரொன்ட் லைன்' (நவ.30—டிச.13) சஞ்சிகைக்கு அளித்த பேட்டி ஒன்றில் மேற்கண்டவாறு கூறி இருக்கின்றார்.

'புரொன்ட் லைன்' சஞ்சிகை சென்னை 'இந்து' ஆங்கில நாளிதழ் நிறுவனம் வெளியிடுவது.

திரு. டி. எஸ். சுப்பிரமணியன் திரு. பிரபாகரனை பேட்டி கண்டார்.

பேட்டி விபரம் வருமாறு:-

கேள்வி: மற்றைய இயக்கங்கள் போல் அல்லாது உங்கள் இயக்கம் முதலில் ஒரு இராணுவ அமைப்பாக ஆரம்பித்தது. பின்னர்தான் மார்க்ஸிஸ லெனினிச சித்தாந்தங்களைச் சுவீகரித்துக் கொண்டது. ஈழ மக்கள் விடுதலை இயக்கம் ஒரு கம்யூனிஸ்ட் பிரிவாக ஆரம்பித்து பின்னர் இராணுவப் பிரிவைச் சேர்த்துக் கொண்டது.

—பிரபாகரன்: ஆரம்பத்தில் எமக்கு என்று ஒரு லட்சியம் இருந்தது. அது சோஷலிச அரசு ஒன்றை நிறுவுவது.

நாம் நேரடியான போராட்டம் ஒன்றில் இறங்கி விட்டோம் என்பதால், இந்த இலட்சியத்திற்கு நாம் வடிவம் கொடுக்கவில்லை.

கேள்வி: போராட்டங்கள் குறித்து உங்கள் துயர அனுபவங்களின் அடிப்படையில் ஈழம் பற்றிய வெளிநோக்கம் என்ன?

தமிழ் ஈழம் பெற முடியும் என்று கருதுகிறீர்களா?

— பதில்: எமது மக்களின் தீர்மானம் உறுதியாக இருப்பதால், தமிழ் ஈழம் அடைவதற்கு உரிய வாய்ப்புக்கள் பிரகாசமாக உள்ளன. நீண்ட போர் ஒன்றுக்குத் தயார் ஆகின்றோம்.

கேள்வி: புலிகளின் பொதுவான நடவடிக்கை முறை தாக்கிவிட்டு ஓடிவிடுவது என்ற தந்திரோபாயம் என்று தெரிகின்றது. அதற்குப் பிறகு இராணுவம் தமிழ்பொது மக்களைத் தாக்குகின்றது.

1983 கலவரம் கூட 13 இராணுவ வீரர்களை மறைந்து நின்று தாக்கிக் கொன்றதால்தான் ஏற்பட்டது என்ற கருத்து பரவியுள்ளது.

பலஸ்தீன விடுதலை இயக்கம், ஐரிஷ் விடுதலை இராணுவம் ஆகியன தாக்கிவிட்டு ஓடும் தந்திரங்களில் ஈடுபடுவது இல்லை. மேலும் அவை தங்கள் தளத்தை மக்கள் மத்தியில் ஏற்படுத்தி உள்ளன.

நீங்கள் உங்கள் தளத்தை விரிவுபடுத்தி உள்ளீர்களா?

— பதில்: தாக்கிவிட்டு ஓடும் தந்திரத்தை மேற்கொள்ள பலஸ்தீன விடுதலை இயக்கத்திற்கு சொந்த இடம் இல்லை. ஏனெனில் அந்நிய மண்ணில் இருந்து அவர்கள் போராடுகின்றார்கள்.

ஐரிஷ் விடுதலை இராணுவம் தாக்கிவிட்டு ஓடினாலும், பிரிட்டிஷ் ராணுவம் சிவிலியன்களைத் தாக்குவது இல்லை.

நாம் மிகவும் கஷ்டத்தின் மத்தியில் செயல்படுகின்றோம்.

நிதி, இராணுவத்திடம் இருந்து எதிர்ப்பு அடிப்படையிலான தாக்கங்கள் இருந்தும் யாழ்ப்பாணத்திலும் மற்ற இடங்களிலும் நாம் இராணுவத்தைக் கட்டுப்படுத்தி உள்ளோம். அத்துடன் அதனை நாம் வேறுபடுத்தி வலயங்களாக்கி விட்டிருக்கின்றோம்.

எங்களுக்கும் மக்களுக்கும் இடையே இடைவெளி இல்லாததினால் தான் இது சாத்தியமாகின்றது.

யாழ்ப்பாணத்திலும் திருமலை,நிலாவெளிப் பகுதிகள் எல்லாம் எங்கள் கட்டுப்பாட்டுக்குள் உண்டு.

சிவில் நிர்வாகம் அங்கு நடத்துகின்றோம்.

அதன் அர்த்தம்,தாக்கிவிட்டு ஓடும் வன்முறைக்குமேலே ஒருபடி சென்றுள்ளோம் என்பதே.

ஆரம்பத்தில் தாக்கிவிட்டு ஓடும் தந்திரங்களைக் கடைப்பிடித்தாலும் படிப்படியாகத் தடைகள் வருவதற்கு

(4—ம் பக்கம் பார்க்க)

## ஆயுதப்படையினர் நடந்து வர மக்கள் ஓட்டம்

மட்டக்களப்பு, டிச 5

புதன்கிழமை பகல் ஆயுதப்படையினர் மட்டக்களப்பு கடைவீதி வழியாக நடந்து வந்தனர்.

இதைத் தொடர்ந்து பதற்றம் ஏற்பட்டது. மக்கள் கிலிகொண்டு ஓடினர்.

உணவுப் பொருள்களை வாங்கவே ஆயுதப்படையினர் நடந்து வந்தனர் என்பது பின்னர்தான் தெரியவந்தது.

## ஜீ. சி. ஈ. பரீட்சையை குழப்பினால் தண்டனை
### மட்டக்களப்பில் சுவரொட்டி

மட்டக்களப்பு, டிச. 5

ஜீ. சி. ஈ. சாதாரண தரப் பரீட்சையைக் குழப்புவோருக்குத் தண்டனை விதிக்கப்படும் என்னும் எச்சரிக்கைச் சுவரொட்டிகள் மட்டக்களப்பில் நேற்றுக் காணப்பட்டன.

தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கம்,ஈரோஸ் இயக்கம் ஆகியவற்றின் பெயர்கள் இச் சுவரொட்டிகளில் காணப்பட்டன.

டிசம்பர் 6-ஆம் திகதி ஜீ. சி. ஈ. சாதாரண தரப் பரீட்சை ஆரம்பமாகின்றது.

மட்டக்களப்பில் 42 நிலையங்களில் இப் பரீட்சை நடைபெறும். 4229 தனிப்பட்ட பரீட்சார்த்திகளும், 3167 பாடசாலை மாணவரும் இப்பரீட்சை எடுக்க உள்ளனர்.

கேள்வித்தாள்கள் பொலீஸ் நிலையங்களில் இருக்கும் என்றும் பரீட்சை நிலைய அதிகாரிகள் பொலீஸ் நிலையங்களுக்குச் சென்று கேள்வித்தாள்களைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பரீட்சை இடம்பெறும் பாடசாலைகளுக்கு பொலீஸ் பாதுகாப்பு வழங்கப் படமாட்டாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## இரு சடலங்களை ஆயுதப்படையினர் எரித்தனர்

மட்டக்களப்பு, டிச.5

கல்லடியில் ஆயுதப் படையினரால் கொலையுண்ட ஆறு தமிழர்களில், அடையாளங் காணப்படாத நபரின் சடலமும்—

மட்டக்களப்பு அரசடியில் சைனயிட் அருந்தித்தற்கொலை செய்து கொண்ட அடையாளம் காணப்படாத இளைஞரின் சடலமும்—

பாதுகாப்புப் படையினரால் புதன்கிழமை எரிக்கப்பட்டன.

பறவைக் காவடி வடிவில்

## காத்தான்குடி மரத்தில் தொங்கிய சடலம்
### கூட்டணி பிரமுகருடையதாம்

மட்டக்களப்பு, டிச 5

காத்தான்குடி ஆஸ்பத்திரிக்கு முன்னால் உள்ள அரசமரத்தில் மரணதண்டனை விதிக்கப்பட்ட ஒரு குடும்பஸ்தரின் சடலம், பறவைக்காவடி அமைப்பில் தொங்கவிடப்பட்டிருந்தது.

இன்று (புதன்கிழமை) மாலை இச்சடலம் காணப்பட்டது.

ஆரையம்பதியைச் சேர்ந்த கார் சாரதி இரா. தவராசா (வயது 33) வின் சடலமே அது என்று பின்னர் அடை

(4—ஆம் பக்கம் பார்க்க)

## தலைமன்னார் ரயிலில் 50 ஆயிரம் கொள்ளை

தலைமன்னார், டிச. 5

தலைமன்னாரிலிருந்து அனுராதபுரம் சென்ற ரயிலில் நேற்று 50 ஆயிரம் ரூபா கொள்ளையடிக்கப்பட்டது.

மடு ரயில் நிலையத்தில் வாக்கிடோக்கி இயந்திர துப்பாக்கிகள் சகிதம் ஏறிய நான்கு இளைஞர்களே இக்கொள்ளையை நடத்தியிருக்கிறார்கள்.

அவர்களில் இருவர் 'கார்ட்' அறையிலும் எஞ்ஜின் அறையிலும் ஏறினார்களாம். துப்பாக்கி முனையில் ரயில் செட்டிகுளம்வரை கொண்டு செல்லப்பட்டது.

வழியில் ஓரிடத்தில் வைத்து கார்ட் அறையில் வசூல் பணம் வைக்கப்பட்டிருந்த இரும்புப் பெட்டியை இறக்கினார்கள். பின்னர் அது ஜீப் ஒன்றில் கொண்டு செல்லப்பட்டது.

இந்தச் சம்பவம் நேற்று பிற்பகல் மூன்று மணிக்கு நடைபெற்றது.

கொள்ளையர் சென்ற ஜீப்பை ஆயுதப் படையினர் ஹெலிக்கொப்டர் மூலம் தேடிவருகிறார்கள்.

### முச்சந்தி முரளி



எத்தனை நகரங்களிலே வைத்து, எத்தனை தடவையள் இவை இரண்டு பேரும் சந்திச்சுப் போட்டினம். வருஷமும் முடியப் போகுது தீர்வுக்கு ஆரம்பமே தொடங்கயில்லை இன்னும்!

## இராணுவத்தில் பணியாற்ற மறுத்து தற்கொலை

யாழ்ப்பாணம், டிச, 5

இராணுவத்தில் பணியாற்ற விருப்பமில்லாத தென் இலங்கை இளைஞன் நஞ்சு அருந்தித் தற்கொலை செய்து கொண்டான்.

இளைஞனின் பெயர் கமகேபேர்ஸி. வயது 29. மாத்தறையில் இஹகொட என்ற இடத்தில் வசிப்பவர்.

மாத்தறை மரண விசாரணை அதிகாரி மரண விசாரணை நடத்தினார்.

இறந்தவரின் தந்தை டி. சில்வா சாட்சியமளிக்கையில் கூறியதாவது:

இறந்தவர் தனது எண்ணத்தின் பேரில் தான் இராணுவத்தில் சேர்ந்தார். தியத்தலாவையில் பயிற்சியில் இருந்த காலத்தில் மனம் உடைந்து தொடர்ந்து பயிற்சிக்குப் போகாது இருந்தார். பயிற்சிக்குப் போகச் சொல்லி நான் வற்புறுத்தினேன். போக விரும்பாத காரணமாக அவர் தற்கொலை செய்துகொண்டார். இப்படிக் கூறினார்.

தற்கொலை செய்து கொண்டதாக தீர்ப்பு வழங்கப்பட்டது.

## ஜனவரி முதல் ஆசிரியருக்கு சம்பள உயர்வு

கொழும்பு, டிச 5

ஜனவரி 1ஆம் திகதி ஆசிரியர்களின் சம்பளங்கள் அதிகரிக்கப்படும்.

இது சம்பந்தமாக நியமிக்கப்பட்ட தயாரட்ன சம்பளக் கமிஷனின் அறிக்கையை அமுல் நடத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

சம்பள உயர்வு வழங்க இருபத்திரண்டரைக் கோடி செலவாகும் என்றும் அறிவிக்கப்பட்டது.

செவ்வாய்க்கிழமை நடைபெற்ற நாடாளுமன்றக்கூட்டத்தில் கல்வி அமைச்சர் திரு. ரணில் விக்ரமசிங்க இத்தகவலை வெளியிட்டார்.

## தமிழகத்தில் 6000 ஆசிரியர்கள் கைது

சென்னை, டிச.5

தமிழ் நாட்டில் சுமார் 6 ஆயிரம் ஆசிரியர்கள் நேற்று கைது செய்யப்பட்டனர்.

10 அம்சக் கோரிக்கையின் கீழ் ஆசிரியர்கள் தமிழ் நாட்டில் மறியல் போராட்டம் நடத்தி வருவது தெரிந்ததே.

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# இந்தியாவின் அணுகுண்டு

## ராஜ்ய சபையில் பகத் விளக்கம்

புதுடில்லி, டிச. 4

**பாரதம் அணுகுண்டு தயாரிக்காது; எனினும் இது எதிர்காலத்தில் நம்மைக் கட்டுப்படுத்திவிடாது.**

இவ்வாறு இந்திய வெளியுறவு அமைச்சர் திரு. பி. ஆர். பகத் தெரிவித்துள்ளார்.

பிரதமர் ராஜீவ்காந்தியின் வியட்நாம், ஜப்பான் விஜயம் பற்றி ராஜ்ய சபையில் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு பதிலளிக்கையிலேயே திரு. பகத் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"நமது அண்டை நாடான பாகிஸ்தான் அணுகுண்டு தயாரிக்கிறது. இது பற்றிய தகவல்கள் எமக்குக் கிடைத்துள்ளன" என்றும் திரு. பகத் அங்கு தெரிவித்தார்.

தொடர்ந்து அவர் அங்கு பேசுகையில், இந்தியாவிடம் அணு ஆராய்ச்சித் திட்டங்கள் இருக்கின்றன எனவும் நாட்டின் அபிவிருத்தித் துறைகள் அதனுல் புதிய பரிமாணங்களைப் பெறும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

பாரதத்தின் அணுகுண்டுத் தயாரிப்புப் பற்றிப்பிரதமர் திரு ராஜீவ் காந்தியும் தனது பாகிஸ்தான் விஜயத்தின்போது குறிப்பிட்டிருந்தார். இந்தியாவுக்கு அணுகுண்டு தயாரிக்கும் சக்தி இருக்கிறது எனவும் அந்த எண்ணம் இந்தியாவுக்கு இப்பொழுது இல்லை எனவும் தெரிவித்திருந்தார்.

அணுசக்திப் பரவல் தடுப்புச் சட்டம் ஒரு தலைப் பட்சமானதெனவும் இந்தியா அதில் கையொழுத்திடாதெனவும் அவர் அங்கு தெரிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

## ஜெனீவா உச்சிமாநாடு முடிவுகள் பற்றி இரு நாடுகளும் ஜம்பம்

### சீன செய்தி ஸ்தாபனம் விமர்சனம்

பீகிங், டிச. 3

ஜெனீவா உச்சி மாநாடு முடிவுகள்பற்றி அமெரிக்காவும் ரஷ்யாவும் அளவுக்கு அதிகமாகக் கூறிவருகின்றன.

இப்படி மக்கள் சீஞு அறிவித்து உள்ளது.

அமெரிக்க அதிபர் றேகனும் ரஷ்ய அதிபர் கோர்பச்சேவும் நவம்பர் 19, 20ஆம் திகதிகளில் ஜெனீவாவில் உச்சி மாநாடு நடத்தியது தெரிந்ததே.

சில முன்னேற்றங்கள் மாநாட்டில் தென்பட்டதாக இரண்டு நாடுகளும் தற்போது கூறிவருகின்றன.

அக்கூற்றுக்களை விமர்சித்தே பீகிங் மேற்கண்ட கருத்தை வெளியிட்டது.

உலகில் சமாதானத்திற்காக ஏங்குகின்றார்கள். இதுவே இன்றைய முக்கிய நிலை.

அமெரிக்க, ரஷ்யாவின் கூட்டாளிகளே இன்று ஆயுதப் போட்டியை எதிர்க்கின்றனர்.

கிழக்கு —மேற்கு நாடுகள் இடையே பதற்றத்தைத் தணிக்கவேண்டும் என்றும் கோரப்படுகின்றது.

இக்கட்டத்தில் ஜெனீவா உச்சி மாநாட்டு பெறுபேறுகள் குறித்து அளவுக்கு அதிகமாக இரண்டு நாடுகளும் கூறி வருகின்றன. — இப்படி அதிகாரபூர்வமான சீன செய்தி ஸ்தாபனம் கூறியுள்ளது.

## பாலியல் காட்சிகளை ஜப்பானியர் வெறுக்கிருர்கள்

டோக்கியோ, டிச. 4

சஞ்சிகைகள், டெலிவிஷன் காட்சிகள் முதலியவற்றில் பாலியல் காட்சிகள் 'சுதந்திரமாக' இடம்பெறுவதை பெரும்பாலான ஜப்பானியர்கள் வெறுக்கின்றார்கள்.

அரசு நடத்திய கருத்துக் கணக்கெடுப்பில் இந்த விபரம் வெளியாகி உள்ளது.

80 சத வீதமான ஜப்பானியர்கள் செக்ஸ் காட்சிகள் நிறைய இடம்பெறுவதை விரும்பவில்லை.

ஆனல் 20 சத வீதமானேர், பெரும்பாலும் இளைஞர்கள் இன்னும் சுதந்திரமான முறையில் செக்ஸ் படங்கள் சஞ்சிகைகள், டெலிவிஷன் படங்கள் இடம்பெற வேண்டும் என்று விரும்புகின்றனர்.

## ஜப்பானில் ரயில் சேவை சீர்குலைவு

வாஷிங்டன் டிச 4

ஜப்பானின் ரயில் சேவையை அண்மையில் சீர்குலையச் செய்ததற்குத் தாங்களே பொறுப்பு என்று தீவிரவாதக் குழு ஒன்று உரிமை கோரியுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை ரயில் நிலையம் ஒன்று எரிக்கப்பட்டதைத் தொடர்ந்து, ரயில் சேவை முற்றுகச் சீர்குலைந்தது.

இது சம்பந்தமாக 48 பேர் கைது செய்யப்பட்டு விசாரணைக்காகத் தடுத்து வைக்கப்பட்டனர்.

## தினசரி சினிமா

### நளினிகாந்த் இப்போது கதாநாயகன்

மூன்றாம் முடிச்சுபுகழ் நளினிகாந்த் தமிழ்த் திரையுலகில் ஒரு 'பிஸி' நடிகராக மாறிக் கொண்டிருக்கிறர்.

'அழைத்தால் வருவேன்' படத்தில் முதன் முதலாக கதாநாயகனுக நடித்தார். நீண்ட காலத்துக்குப் பின்னர் இப்போதுதான் இவருக்குப் பல படங்களில் கதாநாயகனுக நடிக்கும் வாய்ப்புக் கிடைத்துள்ளது.

பார்வையில் ஒருவித வில்லத்தனமும், நடையில் மிடுக்கும் கம்பீரமும் இவரது தனி ஸ்டைல்.

ரஜனியின் தோற்றத்தையுடைய இவர், அவரது இடத்தை வெகு விரைவில் பிடிக்கவும் கூடும்.

### வனிதாவின் ரசனை!

படப்பிடிப்பின்போது பொழுது போக்கு என் பெயரில் டபுள் ஆபாசமாகப் பேசும் பழக்கம் உள்ளவர்கள் காந்திமதி, எஸ். என். பார்வதி, புலியூர் சரோஜா. இப்போது அந்த வரிசையில் வனிதாவும் சேர்ந்துவிட்டார்.

இடைவேளையின் போது பக்கத்திலுள்ள நடிகர்களிடம் ஆபாச ஜோக்ஸ் சொல்ல ஆரம்பித்து விடுகிறாராம் வனிதா.

### 'வேங்கை வெளியே வருது' கவனம்!

"வேங்கை வெளியே வருது", "அந்தி மழை" ஆகிய இரு படங்களும் கே. எஸ். ரகுராம் டைரக்ஷனில் வேகமாக வளருகின்றன.

"வேங்கை வெளியே வருது" படத்துக்கு வாலி எழுதிய பாடல், சங்கர் – கணேஷ் இசையமைப்பில் அண்மையில் பதிவானது.

அபஸ்வரம் ராம்ஜி இருபடங்களுக்கும் கதை திரைக்கதை, வசனம் எழுதுகிறார். பல புது முகங்கள் இப்படங்களில் அறிமுகமாகிறார்கள்.

## இந்திய ராஜதந்திரிகளை தாக்கிய சீக்கியர்களை பாகிஸ்தான் கைது

### இந்திய வற்புறுத்தலில் கைது செய்யப்பட்டனர்

புதுடில்லி, டிச. 4

இரண்டு இந்திய ராஜதந்திரிகளைத் தாக்கிய கனடா நாட்டு சீக்கியர்களைப் பாகிஸ்தான் மீண்டும் கைது செய்தது.

இத்தாக்குதல் சம்பவம் பாகிஸ்தான்நகரான லாகூரில் இடம் பெற்றது.

ஆரம்பத்தில் இவர்களை பாகிஸ்தான் அதிகாரிகள் கைது செய்யவில்லை.

இந்தியாவின் வற்புறுத்தலின் பேரில் தான் இவர்கள் கைதானார்கள் என்று இந்திய வெளிநாட்டு அமைச்சர் திரு. பி. ஆர். பகத், ராஜ்ய சபைக் கூட்டத்தில் தெரிவித்தார்.

பின்னர் இரண்டு சீக்கியர்களும் லாகூர் நீதிமன்றம் ஒன்றில் ஆஜர் செய்யப்பட்டனர்.

பிணையில் விடப்பட்ட இவர்களைப் பாகிஸ்தான் அதிகாரி ஒருவர் அழைத்துச் சென்றதாகவும், அந்த அதிகாரிதான், இந்திய ராஜதந்திரிகளைத் தாக்கும்படி சந்தேக நபர்களைத் தூண்டியதாகவும் செய்திகள் கூறுகின்றன.

## ராஜினுமா

வாஷிங்டன், டிச 4

அமெரிக்காவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் திரு. மக்பிளாறல் ராஜினுமாச் செய்துவிட்டார் என்று அறிவிக்கப்படுகின்றது.

இதுபற்றி உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படவில்லை.

ஆலோசகர் பதவிக்கு புதியவர் ஒருவரைத் தெரிவு செய்த பின்னர், இவரின் ராஜினுமா முறைப்படி அறிவிக்கப்படும் என்று தெரிகின்றது.

## அமெரிக்காவிடம் இஸ்ரவேல் மன்னிப்பு

டெல் அவிவ், டிச. 4

நிர்ப்பந்தம் காரணமாக இஸ்ரவேல் அரசு, அமெரிக்காவிடம் மன்னிப்புக் கோரியது.

உளவு நடவடிக்கையில் இரண்டு இஸ்ரவேல் ராஜதந்திரிகள் சம்பந்தப்பட்டனர் என்பது குறித்து இரண்டு நாடுகளுக்கும் இடையேயான உறவில் விரிசல் ஏற்பட்டு இருந்தது.

உளவு அம்பலமானதைத் தொடர்ந்து இஸ்ரவேல் அந்த இரண்டு ராஜதந்திரிகளையும் உடனே திருப்பி அழைத்தது. இது அமெரிக்காவுக்கு ஆத்திரத்தை உண்டுபண்ணியது.

இந்தச் சம்பவம்பற்றி அமெரிக்க ஜனுதிபதி றேகன் சொன்னதாவது: 'எந்த நாட்டைச் சேர்ந்த உளவாளியானுலும் அமெரிக்கா அவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யத் தயங்காது. அமெரிக்காவின் சிநேக நாடாக இருந்தாலும் சரிதான்' — இப்படி திரு. றேகன் சொன்னர்.

இப்பொழுது, இஸ்ரவேல் அமெரிக்கா கொடுத்த நிர்ப்பந்தத்தின் மீது, அமெரிக்காவிடம் மன்னிப்புக் கோரியுள்ளது.

இது குறித்து கருத்துத் தெரிவிக்க இஸ்ரவேல் மறுத்துவிட்டது.

'அமெரிக்காவிற்கு எதிராக உளவு பார்ப்பது, இஸ்ரவேலின் கொள்கைக்கு முரணனது' — இப்படி இஸ்ரவேல் அமைச்சரவைப் பேச்சாளர் சொன்னர்.

## 169 வயது மதகுரு மரணம்

### பாகிஸ்தான் அறிவிப்பு

இஸ்லாமாபாத், டிச. 4

169 வயதான இஸ்லாமிய மதகுரு ஒருவர் சனிக்கிழமை மரணமானதாக பாகிஸ்தான் அறிவித்தது.

இத்தகவலை பாகிஸ்தானின் அதிகாரபூர்வமான நாளிதழ் வெளியிட்டது.

ஆனல் வயது சம்பந்தமான ஏனைய தகவல்களை அந்த நாளிதழ் வெளியிடவில்லை.

கின்னஸ் புத்தகத்தின்படி உலகில் ஆகக்கூடிய வயதுள்ளவர், ஜப்பான் நாட்டில் வசிக்கின்றார். அவரின் வயது 120 பெயர் ஷீகியோ இஸாமி.

இதனிடையில் தாய்லாந்தில் 122 வயதில் ஒரு பெண் வாழ்வதாக ராய்ட்டர் செய்தி ஸ்தாபனம் அறிவித்துள்ளது. அவரின் பெயர் சிடி டோல்மோர் வேமசாலி.

தாய்லாந்தின் ஆகக் கூடிய வயதானவர் என்று இவரை தாய்லாந்து சுகாதாரத் திணைக்களம் பிரகடனப் படுத்தியுள்ளது.

## இந்திய கடற்படை வீரச் செயல்கள் நினைவு கூரப்பட்டன

புதுடில்லி, டிச4

1971இல் இடம்பெற்ற பங்களாதேஷ் யுத்தத்தில் இந்தியக் கடற்படை நடத்திய வீரச் செயல்கள் இன்று புதன் கிழமை நினைவு கூரப்பட்டன.

இந்தியக் கடற்படைத் தினம் புதன் கொண்டாடப்பட்டது.

"இந்தியக் கரையோரப்பகுதிகளைப் பாதுகாக்கும் பொறுப்பு கடற்படையினருக்கு உண்டு. இந்தியக் கடற்படையினர் தியாகப் பணியாக அதனை மேற்கொண்டு வருகின்றனர்". இப்படி இந்திய ஜனுதிபதி கியானி ஜெயில்சிங் வாழ்த்துச் செய்தியில் கூறினர்.

கடற்படையினர் நாட்டின் பாதுகாப்பைத் தொண்டாகக் கருதி தங்களை அர்ப்பணித்து வருகின்றனர். இது குறித்துப் பெருமை அடைகின்றேன் – இப்படி பிரதமர் ராஜீவ் காந்தி சொன்னர்.

## மட்டக்களப்பில் குண்டு வெடிப்பு மக்கள் பதற்றம்

மட்டக்களப்பு, டிச 5

திங்கள் இரவு 8.20 மணி அளவில் மட்டக்களப்பில் பெரிய குண்டு ஒன்று வெடித்தது.

குண்டு வெடிப்புச் சத்தத்தை அடுத்து ஹெலிக்கொப்டர்கள் தாழப் பறந்து சென்றன. துப்பாக்கி வேட்டுச் சத்தங்களும் கேட்டன.

இதனுல் நகரில் பெரும் பதற்றம் நிலவியது. எனினும் அசம்பாவித சம்பவம் பற்றி தகவல் எதுவும் இல்லை. இதற்கு முன்னரும் பெரிய குண்டு வெடிப்புச் சம்பவம் ஒன்று மட்டக்களப்பில் இடம் பெற்றது குறிப்பிடத்தக்கது.

# வெளி உலகில்

## எகிப்து லிபியாவை பயமுறுத்துகிறது

### ஈரானும் சிரியாவும் உதவப் போவதாக அறிவிப்பு

தெஹ்ரான், டிச 4

எகிப்து நாட்டினுல் பயமுறுத்தப்படும் லிபியாவுக்கு சிரியாவும் ஈரானும் உதவும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தெஹ்ரான் வானெலி இப்படி அறிவித்தது.

சிரியா பிரதமர் அப்துல்ரவுப் காஸிம், ஈரானிய பிரதமர் மிர்ஹுசேன் முஸாவியும், தெஹ்ரானில் வைத்து இந்த உறுதிமொழியை வழங்கினர்.

மத்திய கிழக்குப் பிராந்தியத்தில் உள்ள முற்போக்கு நாடுகளுக்கு ஆதரவு வழங்குவது என்றும் இவர்கள் உறுதி அளித்தனர்.

ஈரான், சிரியா, லிபியா நாடுகளுக்கு இடையேயான ஒற்றுமையை எவரும் பிரிக்கமுடியாது என்றும் அவர்கள் உறுதி கூறினர்.

எகிப்திய விமானம் ஒன்று கடத்தப்பட்டதும் பின்னர் அது எகிப்திய கமாண்டோக்களினுல் மோல்டாவில் வைத்துத் தகர்க்கப்பட்டதும் தெரிந்ததே.

கடத்தலுக்குப் பின்னணியில் லிபியா இருந்தது என்று எகிப்து குற்றம் சாட்டுவதும் அதைத் தொடர்ந்து லிபியாவினுடனன எல்லையில் எகிப்து தனது படைகளைக் குவிப்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில் தான் லிபியாவுக்கு ஆதரவு அளிக்க ஈரான், சிரியா நாடுகள் முன்வந்துள்ளன.

## அரசியல் தஞ்சம் குறித்து மேற்கு ஜெர்மன் நீதிமன்றம் தீர்ப்பு

பெர்லின், டிச 4

அரசியல் ரீதியில் திட்டமிட்டு பழிவாங்கப்படுவதை நிரூபித்தால் மட்டுமே மேற்கு ஜெர்மனி எவருக்கும் அரசியல் தஞ்சம் வழங்கும்,

இப்படி சமஷ்டி நீதிமன்றம் ஒன்று மேற்கு ஜெர்மனியில் தீர்ப்பு வழங்கியுள்ளது.

136 இலங்கைத் தமிழருக்கு அரசியல் தஞ்சம் வழங்கப்படுவதற்கு சார்பாக கீழ் நீதிமன்றம் ஒன்று அளித்த தீர்ப்பை ரத்துச் செய்து வழங்கிய தீர்ப்பு ஒன்றிலேயே சமஷ்டி நீதிமன்றம் இப்படிக் கூறியது.

தற்போது இலங்கையில் நிலவும் இனப்பிரச்சினையை வைத்து மேற்கு ஜெர்மனியில் எவரும் அரசியல் தஞ்சம் கோரமுடியாது — என்றும் சமஷ்டி நீதிமன்றம் தீர்ப்பு அளித்துள்ளது.

மேற்கு ஜெர்மனியில் 8,000 இலங்கைத் தமிழர் அரசியல் தஞ்சம் கோரியுள்ளனர்.

## பஸ் சேவை இல்லை

தாளையடி. டிச;5.

பருத்தித்துறை—ஆழியவளை பஸ் சேவை நீண்டகாலமாக நடத்தப்படாததினுல் பருத்தித்துறை கிழக்குப் பகுதியிலுள்ள மக்கள் பெரும் போக்குவரத்துக் கஷ்டத்தினை எதிர்நோக்குவதாகப் புகார்செய்யப்படுகிறது.

பருத்தித்துறை டிப்போவினுல் நடத்தப்பட்ட இச்சேவை முற்றுக நிறுத்தப்பட்டதையடுத்து தனியார் வான்காரர்கள் இருமடங்கான கட்டணம் அறவிடுவதாகவும் முறைப்பாடுகள் கூறப்படுகின்றன.

## தென்னபிரிக்காவில் ஓடும் இரத்தத்திற்கு பழிக்குப் பழி

### கறுப்பின தலைவி மண்டெலா சூளுரை

பிரிட்டோரியா, டிச.4

தென் ஆபிரிக்க இரத்தக் களரிக்கு இரத்தத்தால் பழிவாங்குவோம். எமது சுதந்திரம் எம்மை நோக்கி நெருங்கிக் கொண்டிருக்கிறது.

இதை அடைந்தே தீருவோம் என திருமதி வின்னி மண்டெலா சூளுரைத்தார்.

பிரிட்டோரியாவுக்கு அண்மையிலுள்ள ஒரு கிராமத்தில் சட்டத்தை மீறி நடந்த பிரமாண்டமான இரங்கல் கூட்டமொன்றில் திருமதி மண்டெலா உரையாற்றினர்.

ஒரு வாரத்துக்கு முன் கொல்லப்பட்ட கறுப்பர்களுக்கான தொகுப்பு மரணச் சடங்காக அது நடைபெற்றது.

சோகமே உருவாக பல்லாயிரக் கணக்கான மக்கள் அந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்டனர்.

அங்கு திருமதி வின்னி மண்டெலா தொடர்ந்து உரையாற்றுகையில்:-

இதுவரையும் நமக்கெதிராக கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள அநியாயங்களுக்கும் அடக்குமுறைகளுக்கும் முடிவு காணுவோம். அதற்காக நாம் தொடர்ந்து போராடுவோம் என்றார்.

திருமதி வின்னி மண்டெலாவின் கணவரும் தென் ஆபிரிக்க விடுதலை இயக்கத் தலைவருமான திரு. நெல்சன் மண்டெலா கடந்த 25 ஆண்டுகளாகத் தொடர்ந்து சிறையில் வாடுகிறார்.

## மார்க்கோஸ் உத்தரவிலேயே எனது கணவர் கொல்லப்பட்டார்

### திருமதி அக்கியூனே ஆத்திரம்

மணிலா, டிச. 4

எனது கணவனைக் கொல்ல உத்தரவு இட்டவர் ஜனுதிபதி பெர்டினண்ட் மார்கோஸ்தான். அவர் பதவியில் இருந்து நீங்கியபிறகு நியாயத்துக்காக நான் போராடுவேன்.

இப்படி கொல்லப்பட்ட எதிர்க்கட்சித் தலைவரின் மனைவி திருமதி கொரயோன் அக்கியூனே செய்தியாளர் மாநாட்டில் பிரதிக்ஞை எடுத்துக் கொண்டார்.

எதிர்க்கட்சித் தலைவர் கொலை வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்ட அனைவரும் விடுதலை செய்யப்பட்டபின்னர் நடத்தப்பட்டது இச்செய்தியாளர் மாநாடு.

'திரு. மார்கோஸ் பதவியில் இருந்து நீங்கிய பின்னர் நியாயத்திற்காக நான் போராடும்போது கொலைவழக்கு எதிரிகளில் ஒருவராக திரு. மார்கோஸ் இருப்பார். — இப்படியும் திருமதி அக்கியூனே குறிப்பிட்டார்.

பிலிப்பீன்ஸ் தேர்தலில் திருமதி அக்கியூனே எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளராகப் போட்டியிட முன்வந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## வெளிநாட்டு வங்கிகளுக்கு மூடுவிழா

கார்ட்டூம், டிச. 4,

சூடான் நாட்டில் வெளிநாட்டு வங்கிகள் இயங்க அனுமதிக்கப்படமாட்டா.

சூடான் நிதி, பொருளாதார திட்டமிடல் அமைச்சர் அவாட் அப்துல் மஜீத் இப்படி அறிவித்ததாக 'சுனு' செய்தி ஸ்தாபனம் அறிவித்தது.

சூடானில் வெளிநாட்டு வங்கிகள் இயங்கி வந்தன இவை தந்த அனுபவம் அவ்வளவு 'மகிழ்ச்சி'யாக இல்லை.

அந்த வங்கிகள் மீது கட்டுப்பாடு இல்லாததன் காரணமாக, துஷ்பிரயோகங்கள் நிறைய இடம்பெற்றன.

இப்படி சூடான் அமைச்சர் அறிவித்தார்.

## சீக்கியர்கள் கனடாவில் ஆர்ப்பாட்ட ஊர்வலம்

ஒட்டாவா, டிச 4,

கனடாவில் இருந்து 2,800 சீக்கியர்கள் வெளியேற்றப்பட்டுள்ளனர். கனடா அரசு கடந்த 11 மாதங்களாக சீக்கியர்களை வெளியேற்றுவதைத் தடைசெய்து வைத்து இருந்தது.

இப்பொழுதுதான் கனடா அரசு, சீக்கியர்களைத் திருப்பி அனுப்பத் தீர்மானித்துள்ளது.

இதை எதிர்த்து கனடாவில் உள்ள சீக்கியர்கள் ஆர்ப்பாட்டஞ் செய்தனர். 100 சீக்கியர்கள் ஒட்டாவா நாடாளுமன்றக் கட்டடத்தை நோக்கி ஊர்வலமாகச் சென்றனர்.

இந்தியாவுக்குத் திருப்பி அனுப்பினுல் அங்கு அரசு எமலவரைத் துன்புறுத்தும் என்று ஆர்ப்பாட்டக்காரர் தலைவர் கோபால் சிங் பிரார் சொன்னர்.

## திருமலை வைத்திய அதிகாரியின் இடமாற்றம் ரத்து

திருகோணமலை, டிச. 5

திருகோணமலை மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் சி. சி. கே. செல்லத்துரையின் இடமாற்றம் ரத்துச் செய்யப்பட்டது.

சுகாதாரத் திணைக்களம் இவரைத் திடீர் என்று நீர்கொழும்புக்கு இடமாற்றம் செய்து இருந்தது.

இதனை ஆட்சேபித்து இவர், அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கத்திற்கு முறையிட்டிருந்தார்.

சுகாதாரத் திணைக்களத்துடன் வைத்திய அதிகாரிகள் சங்கம் தொடர்பு கொண்டது.

பாதுகாப்பு அமைச்சின் சிபார்சின் மீதுதான் இடமாற்றம் செய்யப்பட்டதாக சுகாதாரத் திணைக்களம் சங்கத்திற்குத் தெரிவித்து இருந்தது.

கண்காணிப்புக் குழு உறுப்பினரான பேராசிரியர் கா. சிவத்தம்பியின் தலையீட்டை அடுத்து அந்த இடமாற்றம் தற்போது ரத்துச் செய்யப்பட்டு உள்ளது.

## ஆயர்கள், துறவிகள் மறை மாவட்டங்களுக்கு விஜயம் செய்ய ஏற்பாடு

பருத்தித்துறை, டிச. 5

ஆயர்களும், துறவிகளும் அடங்கிய குழுக்கள் எதிர்வரும் ஜனவரி மாதம் வெவ்வேறு மறை மாவட்டங்களுக்கு விஜயம் செய்யவுள்ளன.

இதற்கான தீர்மானம் ஆயர்களும், துறவறசபைத் தலைவர்களும் ஒன்றிணைந்து கடந்த மாத இறுதியில் நடத்திய கூட்டத்தில் எடுக்கப்பட்டது.

குருக்கள், துறவிகள் பொது நிலையினர் மத்தியில் நல்லுறவையும் ஒற்றுமையையும் ஏற்படுத்த இக் குழுவினர் ஆசிப்பார்கள்.

## போராளிகள் இறந்ததாக தகவல்

கொழும்பு, டிச. 5

குச்சவெளிக்கும் புல்மோட்டைக்கும் இடையில் டிராக்டர் ஒன்றில் பயணம் செய்த நான்கு தமிழ்ப் போராளிகள் கொல்லப்பட்டனர் என்று பாதுகாப்பு அமைச்சு தெரிவித்தது.

**உதய சங்கற்பம்**

பயம் என்பதையே அறியாத இரும்பினை உள்ளமும் இதயமும் தேவை.

—விவேகானந்தர்


**உதயன்**

உண்மை — அஞ்சாமை — நடுநிலைமை

இல: 15, 2வது ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 24805 22078 5-12-85 த. பெ. 23


## தமிழ்ப் பகுதிகள்மீது பொருளாதாரத் தடையா?

வெளிநாட்டு விதை உருளைக் கிழங்கு கேட்டு வடபகுதி விவசாயிகள் விடுத்த கோரிக்கை நிராகரிக்கப்பட்டுவிட்டது. இம்முறையும் நுவரெலியாவில் உற்பத்தி செய்யப்படும் விதை கிழங்கே அனுப்பப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இம்மாதம் பத்தாம் திகதிக்கு முன்னர் விதை கிழங்கை யாழ்ப்பாணம் கொண்டு வந்து சேர்க்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. இப்போதுள்ள எரிபொருள், வாகனத் தட்டுப்பாடுகள் அதற்கு முட்டுக்கட்டையாக இருக்கின்றன. ஆகையால் குடாநாட்டு விவசாயிகளுக்கு உரிய பருவ காலத்தில் விதை கிழங்கு கிடைக்குமா என்பது சந்தேகம்.

எமக்குத் தேவையான சகல பொருள்களையும், பண்டங்களையும் இயன்றவரை உள்நாட்டில் தயாரிப்பதற்கு ஊக்கம் அளிக்க வேண்டும். அது உண்மை. அப்போதுதான் பொருளாதாரத்தை வளமாக்கலாம்.

உள்நாட்டு உற்பத்தி என்பதற்காக யாழ்ப்பாண மண்ணுக்கு ஒத்துவராத — நல்ல விளைச்சலைத் தராத — விதை கிழங்கை குடாநாட்டு விவசாயிகளுக்குத் திணிப்பதா?

நுவரெலியாவில் உற்பத்தியாகும் விதை உருளைக் கிழங்கைப் பயன்படுத்தியதால் வடக்கில் கடந்த மூன்று வருடங்களாக அந்தப் பயிர்ச்செய்கை தோல்வி கண்டு வருகிறது. அதனைக் கொழும்பில் உள்ளவர்களுக்குத் தெரியப்படுத்தியும் அது அவர்களுக்குப் புரியவில்லையா? அல்லது குடாநாட்டின் பொருளாதாரத்தை நாசப்படுத்த வேண்டும் என்ற நோக்குடன் நுவரெலியாக் கிழங்கு திணிக்கப்படுகிறதா?

வடக்கு, கிழக்குப் பகுதிகளில் நடக்கும் அட்டூழியங்களால் அவற்றின் பொருளாதாரம் ஏற்கனவே பெரிதும் நலிந்துவிட்டது. போக்குவரத்து வசதியின்மை, எரிபொருள் தட்டுப்பாடு, பாதுகாப்பற்ற நிலை என்பவற்றால் தமிழ் விவசாயிகள் பாதிப்படைந்துள்ளனர். நாளாந்தம் தமது தொழிலைச் சரிவரச் செய்ய முடியவில்லை. உற்பத்தி செய்யும் விளைபொருள்களைக்கூட நியாய விலையில் சந்தைப்படுத்த முடியவில்லை.

பனையால் விழுந்தவனை மாடு ஏறி மிதித்தால் எப்படி இருக்கும்? ஏற்கனவே மெலிந்து, சுருங்கிப் போயிருக்கும் குடாநாட்டின் பொருளாதாரத்தை மேலும் நசுக்க அரசு முயல்வது ஏன்?

தமிழ்ப் பகுதிகளின் பொருளாதாரத்தை அமுக்குவதன்மூலம் அரசியலில் தமக்குச் சாதகமான சூழ்நிலையைத் தோற்றுவிக்கலாம் என்ற திட்டமும் அரசுக்கு இருக்கலாம். அப்பகுதிகள் மீது இவ்வாறான மறைமுகப் பொருளாதாரத் தடைகளை விதிக்கத் திட்டமிடுகிறதோ எனவும் நினைக்க இடமுண்டு.

வடக்கு, கிழக்கின் அரசியல் பொருளாதார நலனில் அக்கறை கொண்ட சகலரும் இந்த ஆபத்தைக்கவனத்தில் கொள்ள வேண்டும். விதை உருளைக் கிழங்கில் தொடங்கி அன்றாட உணவுப் பொருள் வரைக்கும் இத்தகைய அமுக்கம் வியாபிக்கலாம்.

அவ்வாறான ஒரு நிலையைச் சமாளிக்க எமது பொருளியல் அறிஞர்களும், வசதி படைத்தவர்களும், தொண்டர் ஸ்தாபனங்களும் ஒன்றாகக் கலந்து பேசிச் செயலில் இறங்க வேண்டும்.

## வெற்றிடங்களை நிரப்பாதது குறித்து பிரஜைகள் குழு கவலை

சுன்னாகம், டிச. 5

யாழ். அபிவிருத்திச் சபையின் சுன்னாகம் உப பிரிவில் உள்ள சகல வெற்றிடங்களும் நிரப்பப்பட வேண்டும். மின்சார அத்தியட்சகர் பதவி வெற்றிடம் நீண்ட காலமாக நிரப்பப்படாதிருப்பது கவலை அளிக்கிறது.

கடந்த சனிக்கிழமை நடந்த சுன்னாகம் பிரஜைகள் குழுக் கூட்டத்தில் மேற்கண்ட தீர்மானம் எடுக்கப்பட்டது.

இத் தீர்மானத்தின் பிரதிகள் உள்ளூராட்சி அமைச்சருக்கும் அதிகார மளிக்கப்பட்ட சுன்னாகம் பகுதி உத்தியோகத்தருக்கும் அனுப்பி வைக்கப்பட்டன.

சுன்னாகம் பிரஜைகள் குழுவின் முயற்சியால் நிர்மாணிக்கப்பட்டுவரும் மூன்று மின்மாற்றிகளில் முதலாவது மின்மாற்றி திறப்பு விழாவை முன்னிட்டு மின்சார சபை ஊழியர்களுக்கும் அதிகாரிகளுக்கும் பாராட்டுத் தெரிவிக்கும் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

### பூஸாவிலிருந்து இருவர் விடுதலை

மட்டக்களப்பு டிச. 5

பூஸா முகாமில் இருந்து மட்டக்களப்பு இளைஞர்கள் இருவர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

# மாவட்ட சபைகள் விரும்பின் மட்டுமே மாகாண சபை

## அரசு தயாரித்த நகல் செயல் திட்ட யோசனை

> இலங்கை அரசினால், இனப்பிரச்சினை தீர்வுக்காகச் சமர்ப்பிக்கப்பட்ட நகல் செயல் திட்ட யோசனைகள் இப்பொழுது வெளிவந்துள்ளன.
>
> இந்த யோசனைகளை, தமிழ்ஈழ விடுதலை அமைப்புக்கள், தமிழர் விடுதலைக் கூட்டணி ஆகியன கூட்டாக நிராகரித்து விட்டது குறிப்பிடத்தக்கது.
>
> நகல் திட்ட யோசனைகள் உதயனில் தொடர்ந்து வெளியாகின்றன.

**பகுதி 2**

12. ஒரு மாகாணத்தில் உள்ள அபிவிருத்திச் சபை ஒவ்வொன்றும் ஒரு மாகாண சபையாக இயங்குவது என்று முதலில் தீர்மானிக்க வேண்டும்.

சாதாரண பெரும்பான்மையுடன் இத்தீர்மானம் நிறைவேற்றப்படவேண்டும். இப்படி அரைப்பங்கிற்கு மேற்பட்ட அபிவிருத்திச்சபைகள் கேட்டுக்கொண்டால் மட்டுமே மாகாண சபை அமைக்கப்படும். இதற்கான சட்ட மூலத்தை அப்பொழுதுதான் நாடாளுமன்றம் நிறைவேற்றும்.

ஒரு மாகாணத்தில் உள்ள பெரும்பான்மையான அபிவிருத்திச்சபைகள் அப்படித் தீர்மானிக்காவிட்டால், அந்த மாகாணத்தில் மாகாண சபை அமைக்கப்படமாட்டாது.

அந்த இடத்து, இயங்கும் மாவட்ட அபிவிருத்திச்சபைகள் மாவட்ட சபைகளாகத் தொடர்ந்து இயங்கும். அவற்றிற்கான அதிகாரங்கள் மாவட்ட அபிவிருத்திச்சபைகளுக்குரிய அதிகாரங்களாகவே இருக்கும்.

இந்த உடன்பாடு நடைமுறைக்கு வந்த திகதியில் ஒருமாகாணத்தில் உள்ள அரைவாசிக்கு மேற்பட்ட அபிவிருத்திச் சபைகள் இயங்காமல் இருக்கும் பட்சத்தில், அந்த மாகாணத்தில் மாகாண சபை ஒன்று அமைக்கப்பட்டதாகவே கருதப்படும்.

ஒரு மாகாண சபை அமைக்கப்பட்டு இயங்கிக் கொண்டிருக்கும் போது, அந்த மாகாணத்தில் உள்ள அரைவாசிக்கு மேற்பட்ட அபிவிருத்திச்சபைகள் சாதாரண பெரும்பான்மையுடன் தீர்மானித்தால் அவை அந்த மாகாண சபையில் இருந்து விலகிக்கொள்ளும்.

அப்படியான சூழ்நிலையில், சட்டப்படி நிறுவப்பட்ட அமைப்புக்களாக அந்த மாவட்ட அபிவிருத்திச் சபைகள் கருதப்படும்.

### சிறுபான்மை ஆணைக்குழு

13. மொழிவாரியான மற்றும் சிறுபான்மை மக்களை இலங்கையில் சமத்துவ பிரஜைகளாகக் கருதுவதுடன்,

அவர்களின் உரிமைகளையும் அக்கறைகளையும் கவனிப்பதற்கென இந்த ஆணைக்குழு இயங்கும்.

### தொழில் வாய்ப்பு பற்றிய தேசியக் கொள்கை

14. இலங்கைஅரசாங்கத்தின் தொழில்வாய்ப்புக்கொள்கை பாரபட்சம் இல்லாதது.

### தமிழ் அமைச்சு

15. இந்துமத விவகாரத்துக்கு என்று ஏற்கனவே ஒருஅமைச்சு உள்ளது.

திட்டவட்டமான முறையில் விருப்பம் தெரிவிக்கப்பட்டால், தமிழ் அமைச்சு ஒன்றுக்கான கடமைகள், வரையறை பற்றி ஆராயப்படும்.

### ஆயுதப்படையில் சிறுபான்மையினரின் பிரதிநிதித்துவம்

16. இனவிகிதாசாரத்தைப் பிரதிபலிக்கக்கூடியதாக ஆயுதப் படைக்கு ஆட்சேர்ப்பு நடத்தப்படும்.

இயலுமானவரைகுறிப்பிட்ட கால எல்லைக்குள் இது நடைமுறைப்படுத்தப்படும்.

### இலங்கையில் உள்ள இந்திய வம்சாவழியினர்

17. 1964, 1974ஆம் ஆண்டுகளில் செய்து கொள்ளப்பட்ட இந்திய இலங்கை ஒப்பந்தங்களின்படி 6 லட்சம் இந்திய வம்சாவழியினரில் 5 லட்சத்து 5 ஆயிரம் பேருக்கு பிரஜா உரிமை வழங்க இந்தியா ஒப்புக்கொண்டது.

மிகுதியான 95 ஆயிரம்பேரும் 'நாடற்றவர்கள்' என்று கருதப்படுகின்றனர்.

அந்த 95,000 பேருக்கும் இலங்கைப் பிரஜா உரிமை வழங்க இலங்கை எண்ணியிருக்கின்றது.

இந்தியப் பிரஜா உரிமை வழங்கப்பட்டவர்கள் இந்தியா திரும்பிய பின்னரே இலங்கை இதைச்செய்யும்.

### இணைப்பு 1

18. கீழ்வரும் விஷயங்கள் குறித்து மாகாண சபைகள் அதிகாரங்களை, பொறுப்புகளை உபயோகிக்கலாம்:—

(அ) வரையறுக்கப்பட்ட உள்நாட்டு சட்டம் — ஒழுங்கு.

(ஆ) வரையறுக்கப்பட்ட காணிக் குடியேற்றம்.

(இ) விவசாயம், கைத்தொழில்.

(ஈ) கல்வி, கலாச்சாரம் (விவரம் இணைக்கப்பட்டுள்ளது.)

மேற்சொல்லப்பட்ட விஷயங்களும் பணிகளும் மேலதிக விஷயங்களும் பின்னர் இறுதியாக்கப்படும்.

நாடாளுமன்றத்துக்கு என்று பிரத்தியேகமாக ஒதுக்கப்பட்டுள்ள விஷயங்கள், பணிகள் பற்றிய சந்தேகங்கள் நிவிர்த்தி இணைப்பு 2இல் தெரிவிக்கப்பட்டுள்ளன.

மாகாண மாவட்ட சேவைகளை நிறுவக்கூடிய விதிகள் உண்டு. மத்திய அரசாங்கபொதுச்சேவையில் உள்ளவர்கள் மாகாண, மாவட்ட சேவையிலும் சேர்ந்து கொள்ளலாம்.

### உள்நாட்டுச் சட்டம், ஒழுங்கு (அ) பொலிஸ் தலைமை

ஒரு மாகாணசபை எல்லைக்குள் உள்ள பொலிஸ் நிலையங்களில் பணிபுரியும் பொலிஸார் (அந்த மாகாணத்தின் விஸ்தீரணம், சனத்தொகையைப்பொறுத்து) தலைப் பொலிஸ்மா அதிபர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர், அல்லது பொலிஸ் அத்தியட்சகரின் கட்டுப்பாட்டுக்கும் வழிநடத்தலுக்கும் உட்பட்டவர்கள். அந்த அதிகாரியைபொலிஸ்தலைமை அதிகாரி என்று சொல்லலாம்.

மாகாணசபையின் பிரதம நிறைவேற்று அதிகாரியின் சிபார்சுடன் தான் மாகாணத்தின் பொலிஸ் தலைமை அதிகாரியை, பொலிஸ் மாஅதிபர் நியமிப்பார்.

அந்தபொலிஸ் தலைமை அதிகாரி, அந்த மாகாண மக்கள் பெரும்பாலோர் பேசும் மொழியில் பேசக் கூடியவராக இருப்பார்.

இந்த நியமனம் சம்பந்தமாக மாகாணசபையின் பிரதம நிறைவேற்று அதிகாரிக்கும் பொலிஸ் மாஅதிபருக்கும் இடையே கருத்து வேற்றுமை ஏற்பட்டால், இறுதி முடிவுக்காக இப்பிரச்சினை ஜனாதிபதிக்கு விடப்படும்.

(ஆ) ஒரு மாகாணத்தில் உள்ள பொலிஸ் படை வீரர்கள் தொகையில் மாற்றஞ் செய்வதற்குமுன்னர், மாகாண சபையின் பிரதம நிறைவேற்று அதிகாரியின் ஆலோசனை பெறப்படும்.

ஒரு மாகாணத்தில் உள்ள பொலிஸ் நிலையம் ஒவ்வொன்றிலும் பணி புரியும் பொலிஸாரின் எண்ணிக்கையில் மாற்றஞ்செய்யும் முன்னர், அந்த மாகாணசபையின் பிரதம நிறைவேற்றுஅதிகாரியின் ஆலோசனை பெறப்படும்.

### (இ) கான்ஸ்டபிள், சப்-இன்ஸ்பெக்டர் நியமனம்

நாட்டில் கான்ஸ்டபிள்களுக்கான வெற்றிடங்கள் இருந்தால் குறிப்பிட்ட விகிதம் ஒவ்வொரு மாகாணசபைக்கும், அத்துடன் மத்திய அரசுக்கும் ஒதுக்கப்படும்.

மாகாண சபை பிரதேசத்துக்கான கான்ஸ்டபிள் நியமனங்கள் உள்ளூர் மட்டத்திலேயே இடம்பெறும்.

மாகாணசபை பிரதேசத்திற்கான கான்ஸ்டபிள் நியமனங்களுக்கான நேர்முகப் பரீட்சைகள் மூன்று பேர் கொண்ட சபையால் நடத்தப்படும்.

மாகாணசபையின் பிரதம நிறைவேற்று அதிகாரியின் பிரதிநிதி ஒருவர் இச்சபைக்குத் தலைமை வகிப்பார். பிரதம நிறைவேற்று அதிகாரியின் இன்னொருபிரதிநிதியும்பொலிஸ் தலைமை அதிகாரியின் பிரதிநிதி ஒருவரும் சபையின் ஏனைய இரண்டு உறுப்பினர்கள்.

இறுதி நேர்முகப்பரீட்சையை பாதுகாப்பு அமைச்சரின் தலைமையிலான 3 பேர்கொண்ட இன்னொரு சபை நடத்தும். பொலிஸ் தலைமை அதிகாரியின் பிரதிநிதி, மாகாண சபை நிறைவேற்று அதிகாரியின் பிரதிநிதி ஆகியோர் ஏனைய உறுப்பினர்கள்.

இறுதிப் பரீட்சையில் தெரிவானவர்கள்,தேசிய புலன் விசாரணைச் சபையினால் முதலில் விசாரணை செய்யப்படுவார்கள். சபையின் அறிக்கை சாதகமாக இருந்தால் பயிலுநர் கான்ஸ்டபிள்களாக அவர்கள் நியமிக்கப்படுவர். கான்ஸ்டபிள்களுக்கு பயிற்சிகள் கட்டுக் குருந்த பொலிஸ் பயிற்சிக் கல்லூரியில் வழங்கப்படும்.

சப்இன்ஸ்பெக்டர்களுக்கான வெற்றிடங்களும் மேலே கூறப்பட்ட பிரகாரம் நிரப்பப்படும்.

### பதவி உயர்வு

20. மாகாணத்திலுள்ள பொலிஸ் நிலையங்களில் பணிபுரியும் கான்ஸ்டபிள், சார்ஜன்டுகளுக்கான பதவி உயர்வுகளுக்கான நேர்முகப் பரீட்சைகள் 3 பேர் கொண்ட சபையினால் நடத்தப்படும்.

இதற்கு மாகாண பொலிஸ் தலைமை அதிகாரி தலைமை வகிப்பார். மாகாண சபையின் நிறைவேற்று அதிகாரியின் பிரதிநிதி, பொலிஸ் மா அதிபரின் பிரதிநிதி ஆகியோர் ஏனைய இரண்டு உறுப்பினர்கள்.

(தொடரும்)

**பொய்யாமொழி**



கோளில்பொறியில் குணமிலவே எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை.

கேட்காத செவி பார்க்காத கண் முதலியன போல், எண் குணங்களை உடைய கடவுளின் திருவடிகளை வணங்காதவரின் தலைகள் பயனற்றவைகளாம்.

## கூட்டுறவின் தத்துவம் மானுடத்தின் சமத்துவம்

### அமரர் வீரசிங்கம் கருத்து

வடபகுதிக் கூட்டுறவுத் தந்தையாக விளங்கிய அமரர் வீரசிங்கம் மறைந்த 21 ஆவது நினைவு தினம் இன்று.

அதையொட்டி அவரது கருத்துக்கள் அவருக்கே உரித்தான மொழி நடையில் கட்டுரை வடிவில் இங்கு தொகுத்துத் தரப்படுகின்றன.

ஐக்கியம் என்பது ஒன்றாக இயங்குவது. அதற்கு ஆதியுமில்லை, அந்தமுமில்லை. அது என்றுமுள்ளது. எங்குமுள்ளது. அதன் நோக்கு இன்ப சுகம்.

பொருளாதாரத்துறையில் சுபம்பெற மானிடர் கூட்டுறவு இயக்கத்தைக் கையாள்வர். அவர்கள் ஒன்றாக இயங்காவிட்டால் சுபம் அடையார்.

நீரும் நெருப்பும் ஒன்றாக இயங்குமா? ஒன்றாக இயங்கச் சில இலட்சணங்களும், முறைகளும் அமைய வேண்டும். நீரும் நெருப்பும் ஒன்றாக இயங்கிப் பாரிய புகையிரதத்தைச் செலுத்துகிறது.

மானிடரும் ஒன்றாக இயங்கிப் பொருளாதாரத் துறையில் பயனடைவதற்குச் சில விசேஷ இலட்சணங்களும் முறைகளும் தேவை. பரோபகாரத்தால் உந்தப் பெற்ற சுபதர்மங்களே இவை.

ஐக்கிய ஸ்தாபனங்கள் சமூக சேவையையே பிரதானமாகக் கருதுமல்லாமல் காசு லாபத்துக்காக வேலைசெய்தல் இவற்றின் நோக்கம் அல்ல.

பங்கு இலாபம் கொடுப்பதும் ஐக்கிய சங்க அங்கத்தவரின் பங்கு விகிதத்தைக் கட்டுப்படுத்துவதும் இவ்வியக்கப் பொருளியலின் அஸ்திவாரம்.

இலாபத்தின் ஒரு பகுதியை, அங்கத்தவரால் சங்கத்துக்கு வந்த சம்பாத்திய விகிதத்தின்படி பிரித்துக் கொடுப்பதும் ஆங்கிலத்தில் ரிபேட் என்றும் தமிழில் தள்ளுபடி என்றும் அழைக்கப்படும். சேவைக் கொடையும் ஐக்கிய பொருள் உடைமைக் கொள்கையைக்காட்டும். இதுவே ரொச்டேல் கொள்கை எனப்படும்.

இது மார்க்ஸ் என்பவருக்கு ஐம்பது வருடங்களுக்கு முன்பே வில்லியம் ரொம்சன் அவர்களால் பிரசாரப்படுத்தப்பட்டு ரொச்டேல் முன்னோடிகளால் அனுசரிக்கப்பட்டது. கூட்டுறவு இயக்கமும் ஒரு சமூக தத்துவ இயக்கம் என்பதை இது விளக்குகிறது.

### போட்டி

ஓர் ஐக்கிய சங்கம் பொருள் லாப விருத்தி காரணமாக இன்னொரு ஐக்கிய சங்கத்துடன் போட்டியிடுவது ஐக்கிய கொள்கைக்கு மாறு. ஆனால் நுகர்வோரின்

[4-ம் பக்கம்பார்க்க]

**வித்தாரம்**

நேத்துக் காலையிலே பெய்த கொஞ்ச நேர மழையுக்குள்ளை நல்லா நனைஞ்சிட்டாய் போலை. அதுதான் சாடையான தடிமல் குணம்.

ஓம், ஓம். நீ சொல்லுறது சரி தான். எங்கடை ரோட்டுகள் இப்ப இருக்கிற நிலையிலே மழையுக்குள்ளை குடை பிடிச்சுக் கொண்டு சைக்கிள் ஓட முடியுமே.

எண்பத்து நாலாம் ஆண்டுத்தொடக்கத்திலே வந்தமழையாலே அழிஞ்ச ரோட்டுகள் ஒருக்காலும் சரியாத் திருத்தப்படயில்லை.

புண்ணுக்கு பஞ்சிலை வைச்சு மருந்து பூசுமாப்போலை மேலாலை கொஞ்சக் கல்லைப் போட்டு, தாரையும் பேருக்குக் காட்டிப் போட்டு ரோட்டுகளைத் திருத்திச்சினம்.

அது அந்த வருஷத்து மாரி வாறத்துக்கு முன்னமே பப்படம் பொங்கி வந்தமாதிரி மேலாலை வந்து கழண்டு கல்லாப் பிரிஞ்சு போச்சு. பிரிஞ்ச கல்லுகளும் அதுக்கு மேலாலை மினி வானுகள் வின் மண் தெரியாமல் போட்டா போட்டி போட்டு ஓட ஓட நாளடைவில மாவாய்ப் போய்ச்சுது.

எண்பத்து நாலு மாரிக்குப் பிறகு ரோட்டைத் திருத்த வேணும் எண்ட எண்ணம் எந்த நிர்வாகத்துக்கும் இருக்கயில்லை. சில இடங்களிலை கல்லை மட்டும் குவிச்சுப்போட்டு அப்பிடியே விட்டிட்டினம். பிறகு எங்கடை பெடியன்கள் தான் திருத்தி விட்டுதுகள்.

எண்டாலும் குடாநாட்டிலை பல ரோட்டுகளும் குண்டும் குழியுமாகத்தான் கிடக்குதுகள். சில இடங்களிலை மட்டும் இடைக்கிடை வந்து டிப்பாட்மெண்ட்காரர் ரோட்டுகளை பூசிமெழுகினவை.

போன மாதம் பெய்த மழையோடை எல்லா ரோட்டும் சரி.

இப்ப அனேகமா ரோட்டுகள் எல்லாம் ஆறுகுளமாத்தான்கிடக்கு. அதுகளுக்குள்ளாலை தான் வாகனுகள் நீந்தி எழும்புதுகள்.

நாங்கள் படுற கஷ்டம் உந்த டிப்பாட்மெண்டுக்கும் எஞ்சினியர்மாருக்கும் தெரியாத விஷயமே.

கொழும்பிலை இருந்து காசு வரயில்லை எண்டு சொல்லிப்போட்டு அவை சுகமாய் இருந்து சம்பளம் எடுப்பினம்· அவையளுக்கு என்ன!

தார் ரோட்டெல்லாம் இப்ப தாண்டு போன மண் ரோட்டுகளாய்ப் போச்சு.

அங்காலை தெற்குப் பக்கம் எல்லாம் பனிக்கட்டியிலை வழுக்குமாப் போலை வாகனங்கள் ஓடுறுங்கள். நாங்கள் இஞ்சை பழைய காலம் மாதிரி ஒற்றையடிப்பாதை வைக்கப் போகவேண்டியது தான்.

தமிழனுக்கு எல்லாப் பக்கத்தாலையும் சோதினை தான் தம்பி!

— கொண்டோடி

### 150 மூடை மா டிரக்குடன் கடத்தப்பட்டது

150 மூடை பிரிமா மா அவற்றை ஏற்றிச் சென்ற டிரக்குடன் இராணுவ உடை தரித்த மூன்று பேரால் கடத்திச் செல்லப்பட்டது.

திருகோணமலை—கண்டி வீதியில் அனுத்ஓயா என்ற இடத்தில் வைத்து இச்சம்பவம் இடம்பெற்றது.

டிரக்கின் சாரதி இறக்கி விடப்பட்டபின்னரே மாவும் டிரக்கும் கடத்தப்பட்டன. திருமலையில் இருந்து எட்டு மைல் தொலைவில் உள்ள மங்கி பிரிட்ஜ் இராணுவ முகாமில் டிரக்கை எடுத்துக் கொள்ளவாம் என்று கடத்திச் சென்றவர்கள் சாரதியிடம் கூறிவிட்டுச் சென்றனராம்.

கடத்தப்பட்ட மா, டிரக் ஆகியவற்றின் பெறுமதி இலட்சத்து 77 ஆயிரம் ரூபா என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

### மாணவர் சித்தி

திருநெல்வேலி, டிச. 5

கந்தரோடை கந்தையா தமிழ் வித்தியாசாலையில் இருந்து 5-ம் தர புலமைப் பரிசிலுக்கு தோற்றிய செல்வன் யோ. நிர்மலன், செல்வன் சாரீஸ்வரன், செல்வன் து. சுதர்சன், செ. சிவானந்தன் ஆகிய மாணவர்கள் திறமையாகச் சித்தியடைந்துள்ளனர்.

ஐஸ்கிறீம், கேக் வகைகள், பழரச பானங்கள் இவைகளைச் சுவை குன்றாமல் தயாரிப்பதற்குத் தேவையான மூலப் பொருட்கள் யாவற்றையும் பெற்றுக்கொள்ள
★
அபிராமி எசன்ஸ் றேட்ஸ்
31, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
(காரைநகர் மினி பஸ் நிலைய முன்பாக)

# உதயன்

5 - 12 - 1985

HYCO, YEAST, பேக்கிங் பவுடர், மிலக் பவுடர், ஐசிங் சுகர், GOLDEN SYRUP சஜு", பிளம்ஸ் யாவற்றையும் தட்டுப்பாடின்றி விற்பனை செய்பவர்கள்
★
ஐ டி ய ல் ஏ ஜெ ன் ஸி
267 B, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
T'Phone: 23648

இலங்கை இனப் பிரச்சினை

# இந்திய நடுநிலைமை கொள்கையில் மாற்றமில்லை

## அமைச்சரவை கூட்டத்தில் அல்விஸ்

கொழும்பு, டிச.5,

இலங்கை இனப்பிரச்சினையில் இந்திய அரசு மேற்கொண்டு வரும் நடுநிலைமைக் கொள்கையில் எந்தவித மாற்றமும் ஏற்படவில்லை.

இப்படி ராஜாங்க அமைச்சர் கலாநிதி ஆனந்ததிஸ்ஸ டி அல்விஸ் செய்தியாளர் மாநாட்டில் பேசுகையில் தெரிவித்தார்.

அமைச்சரவைக் கூட்டத்தின் முடிவில் இச் செய்தியாளர் மாநாடு நடந்தது.

ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் டாக்கா விஜயத்தில் இந்தியா செல்வது சேர்க்கப் படவில்லை என்றும் அமைச்சர் ஆனந்த திஸ்ஸ டி அல்விஸ் கூறினார்.

டாக்கா விஜயத் திட்டத்தில் இந்தியா செல்லும் திட்டம் உண்டா என்று செய்தியாளர் கேட்டபோதுதான் அமைச்சர் இப்படிக் கூறினார்.

## ரூபவாஹினி

வியாழக்கிழமை
5-12-85

மாலை
5-00 செய்தி
5-05 பீட்டில்ஸ் கார்ட்டூன் தொடர்
5-30 கார்ட்டூன் சிங்களம்
6-00 "இந்திய யானையின் வருங்காலம்"
6-30 செய்தி தமிழ்
7-00 டேற்லைன்-நடப்பு விவகாரம்
7-25 இலங்கையில் நடப்பது 'அந்துன'
8-00 செய்தி- சிங்களம்
8-20 'சமன்தன' டெலி நாடகம்
9-00 செய்தி ஆங்கிலம்
9-20 ஐ. நா சபை 40-வது ஆண்டுவிழா
9-50 பேட்டி 'பிலி சந்தர' வண. பிதா மார்சலின் ஜயக்கொடி
10-15 'யுத்தத்தில் உலகம்'
11-10 ஒளிபரப்பு முடிவு

## கூட்டுறவின்....

(8ம் பக்கத் தொடர்ச்சி)

நயம் கருதி அவர்கள் இம் சேவை நீக்கும் பொருட்டும், சமூக நயத்தின் பொருட்டும் செய்யும் போட்டி ஏற்கத்தக்கது.

தனிப்பட்ட வியாபாரிகள் போன்ற ஸ்தாபனங்கள் கூட்டுறவு இயக்கத்தின் மத்தியில் சமூகத்துக்குத் தீங்கு விளைவிக்க இடமில்லை. சந்தைவிலைக்கு விற்கும் கொள்கை கூட்டுறவு இயக்கம் தனி வியாபாரிகளை அகற்றிப் பொருள் வியாபார சர்வாதிகாரத்தை உருவாக்க விரும்பவில்லை என்று காட்டுகிறது. எவ்வித சர்வாதிகாரத்தையும் கூட்டுறவு இயக்கம் நிராகரிக்கும்.

கூட்டுறவு இயக்கத் தத்துவம் தன்னயம் கருதாத சுயதர்மம். கூட்டுறவுச் சேவையினால் மனுஷ சமத்துவம் விளையும்.

நன்றி: ஐக்கிய தீபம் 1965 ஐப்பசி இதழ்.

## பேச்சுவார்த்தை பயன்தரும்....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

நாம் அனுமதிக்கவில்லை.

கால ஓட்டத்தில் இது ஒரு மக்கள் போராட்டமாக மாறிவிடும்.

இப்போதே யாழ்ப்பாணம் போன்ற இடங்களில் மக்கள் போராட்டமாகிவிட்டது.

மேலும் நாங்கள் ஒரு கெரில்லாப் பிரிவை வைத்துள்ளோம்.

கெரில்லாப் போர் முறையில் தாக்கிவிட்டு ஓடும் தந்திரமும் ஒன்றாகும்.

ஆரம்ப வளர்ச்சியின் போது இதைத்தான் கடைப்பிடித்தோம்.

இப்போது ஒரு தாக்குதலின் பின் மக்களுக்கு பாதுகாப்பும் அளிக்கின்றோம்.

நாங்கள் மக்களுடன் நெருக்கமாக இருப்பதால் இலங்கை அரசு மக்களைத் தாக்குகின்றது. மக்களுக்கும் எமக்கும் இடையே இடைவெளியை ஏற்படுத்தவே அரசாங்கம் இப்படிச் செய்கின்றது.

மக்கள் ஆதரவு இல்லை என்றால் நாம் காட்டிக் கொடுக்கப்பட்டு இருப்போம், இயக்கமும் இருந்திருக்க முடியாது.

கேள்வி: இந்திய அரசு பற்றியும் பிரச்சினைக்கு தீர்வுகொண்டு வருவதற்கான முயற்சிகள்குறித்தும்உங்களின் நோக்கம் என்ன?

தீர்வு ஒன்றை ஏற்குமாறு உங்களை இந்தியா நெருக்குகின்றதா?

பதில்: இதுவரை நாங்கள் நெருக்கப்படவில்லை. இதே சமயம் பேச்சுக்கள் மூலம் பிரச்சினையை தீர்க்க இந்தியா முயல்கின்றது. ஆனால் பேச்சு மூலம் எதுவுமே தீர்க்கப்பட முடியாது என்பதை எங்கள் வரலாறு காட்டுகின்றது.

இருந்தும் இந்தியாவின் முயற்சிகளை நாம் ஆதரிக்கவேண்டும் என்பதால் பேச்சுக்களில் பங்கெடுக்கின்றோம்.

அதே வேளை இலங்கையினால் எதுவித பயனுள்ள தீர்வுக்கும் வரமுடியவில்லை.

உதாரணமாக போர் நிறுத்தத்தை அரசு மீறுகின்றது. அது மட்டுமன்றி சரிவர அமுலாக்குவதும் இல்லை.

பேச்சுக்களுக்கு முன்னோடியாக அமைதி நிலவ வேண்டும்.

ஆனால் இலங்கை அரசு தினமும் எங்களைக் கொல்கின்றது.

கேள்வி: எல்லாத் தமிழ் இயக்கங்களையும் நாட்டை விட்டு வெளியேறும்படி இந்தியா சொல்வதாக வைத்துக் கொள்வோம். அப்பொழுது நீங்கள் என்ன செய்வீர்கள்?

பதில்: எமது எல்லா பயிற்சித் தளங்களும் இலங்கையிலேயே உள்ளன. அங்குள்ள (இலங்கை) அரசியல் நிலையை பகிரங்கப்படுத்தவே நாங்கள் சென்னையில் இருக்கிறோம்.

எந்த வேளையிலும் தாயகம் திரும்பத்தயார்.

இலங்கை குற்றஞ் சாட்டுவதைப் போல எமக்கு இந்தியாவில்எந்த வித பயிற்சித் தளங்களோ அல்லது வேறு எதுவுமோ இல்லை.

ஆட்களைத் திரட்டுதல் தளங்கள் எல்லாமே எமது நாட்டில்தான் அதனால் இப்பிரச்சினை எம்மைப் பாதிக்காது.

கேள்வி: சமீபத்தில் இலங்கைத் தமிழ்பகுதிகளில் நீங்கள் ஒரு பயணம் மேற்கொண்டு உங்களின் பிராந்திய கமாண்டர்களைச் சந்தித்தீர்கள்.

உங்கள் பிரிவினரின் தன்னம்பிக்கை எப்படி உள்ளது? அங்கு நிலைமை என்ன?

பதில்: முன்னேற்றம் தான். போராட்ட வேகத்தில் குறைவு கிடையாது.

பொதுவாகச் சாவதிலும் பார்க்க மொத்தமாகப் போராடிச் சாவது மேல் என்ற எண்ணம் மக்கள் மத்தியில் பலமாக உள்ளது.

எங்கள் தோழர்கள் மக்களுக்கு நெருக்கமாக உள்ளனர். உறுதியாகவும் உள்ளனர். ஒரு போராட்டம் இருக்கும் வரையில் அவர்கள் தங்கள் லட்சியத்துக்காகப் போராடுவார்கள். இறுதித் தோழன் இருக்கும் வரை விடுதலைக்காகப் போராடுவோம்

கேள்வி: பேச்சுவார்த்தைகளில் இருந்து ஏதாவது வெளிவரும் என்று கருதுகின்றீர்களா?

பதில்: எங்களுக்கு நம்பிக்கை இல்லை. 30 ஆண்டுகளாக நடந்தவற்றையும் ஜெயவர்த்தனாவின் வரலாற்றையும் நாம் அறிந்துள்ளோம்.

சாதாரண மக்களுக்குக் கூட பேச்சில் நம்பிக்கை கிடையாது.

இந்தியா, பேச்சுவார்த்தைகளுக்கு எங்களை அழைக்கும் போது அது எங்களுக்கு அரசியல் ஆதரவு தருகின்றது.

அந்தத் திருப்திக்காக பேச்சுக்களில் கலந்து கொள்கின்றோம். அதனால் ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் கைகளில் தான் முடிவுகள் உள்ளது.

கேள்வி: பிரதமர் ராஜீவ் காந்தி. வெளியுறவுச் செயலாளர் ரொமேஷ் பண்டாரி ஆகியோரின் அணுகுமுறை பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

பதில்: பிரதமர் ராஜீவ் காந்தியின் அணுகுமுறை சமாதான வழிகளில் பிரச்சினைக்குதீர்வு காண அவர் நினைக்கின்றார்.

போராட்ட மூலம் அழிவு சந்தேகத்திற்கு இடமில்லாதது. அழிவின் அளவைக் குறைத்து பிரச்சினையைத் தீர்க்க பிரதமர் ராஜீவ் சமாதான வழியை நாடுகின்றார்.

போராட்டம், நீடித்து இழுபடக்கூடியது. ஆகும் அகதிகள் பிரச்சினை கூட இந்திய அரசுக்கு உண்டு. எனவேதான் சமாதான வழியில் பிரச்சினையைத் தீர்க்க பிரதமர் ராஜீவ் விரும்புகிறார்.

ஜே. ஆர். ஜெயவர்த்தனா அதைத் தவறாகக் காட்டுகின்றார்.

திரு. பண்டாரியின் அணுகுமுறை.

1. அவர் இந்திய அரசின் பிரதிநிதி.

2. பிரதமர் சார்பில் சமாதான வழி முறைகளில் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண தன்னாலான அளவுக்கு அவர் முயற்சிக்கிறார்.

இதுவரை போர் நிறுத்த நிபந்தனை விதி முறைகளைக் கூட ஜெயவர்த்தனா அமுலாக்கவில்லை.

எனவே போர் நிறுத்த முயற்சியில் கூட திரு. ரொமேஷ் பண்டாரியால் வெற்றிபெற முடியவில்லை.

கேள்வி: உங்களினதும் மற்றைய இயக்கங்களினதும் அதிகமான அளவு ஜனநாயகம் கிடையாது என்ற கருத்து உண்மையா?

பதில்: இக்கேள்வியை எமது உறுப்பினர்களிடம் கேட்டு இருக்க வேண்டும். அதிக அளவு சுதந்திரம் வழங்கியுள்ளோம்.

# சோதனை மத்தியிலும் தமிழர் சமுதாயத்தை வளர்த்தவர் நாவலர்

## குருபூசை விழாவில் உரை

யாழ்ப்பாணம், டிச.5

நாவலர் தூங்கிக் கிடந்த தமிழ் சமுதாயத்தை தட்டி எழுப்பி இன்று தமிழன் தமிழ் மண்ணிலேயே வாழ வழிவகுத்துக் கொடுத்தவர். எத்தனை சோதனைகள் வந்தாலும் தான் ஒருவனாக நின்று தமிழ் சமுதாயத்தை வளர்த்தவர்.

நல்லூர் திவ்விய ஜீவன சங்க மண்டபத்தில் நடைபெற்ற நாவலர் குருபூசை விழாவில் கலந்துகொண்ட அகதிகள் புனர்வாழ்வுக் கழகத் தலைவர் திரு. கா. விசுவலிங்கம் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் பேசுகையில்: இன்று எத்தனையோ தமிழர்கள் அடைபட்டு, அடிபட்டு அகதி முகாம்களில் தஞ்சம் அடைந்துள்ளார்கள்.

எமது கழகம் நாவலர் செய்த பணியினைப் போல் தமிழர்களுக்குப் பணி செய்யவே உருவாக்கப்பட்டது என்றார்.

சிறப்புரை நிகழ்த்திய திரு. க. நாகேஸ்வரன்,

நாவலரை பூசிப்பதுடனோ அவருக்கு விழா எடுப்பதுடனோ நாம் நின்றுவிடக் கூடாது. அவரின் பணிகளை நாம் தொடர்ந்து செய்வதே அவருக்கு நாம் செய்யும் பெரும் கடமை ஆகும்.

நம் உணர்வுகள், அபிலாஷைகள் ஆகியவற்றை ஒன்றுபட்ட ரீதியில் செயற்படுத்த வேண்டும் என்று அவர் கூறினார்.

திரு. கா. மாணிக்கவாசகர் இறுதியில் நன்றியுரை வழங்கினார்.

நல்லூர் சங்கிலியன் புனர்வாழ்வு முகாமிலுள்ளோருக்கு அன்னதானமும் வழங்கப்பட்டது.

### நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனம்

நாவலர் பெருமான் விட்டுச்சென்ற பணிகள் மேலும் தொடர வேண்டும். நமது சந்ததியினர் நாவலர் பணியை அறிந்துகொள்ள அவரைப்போல் நாமும் வாழ்ந்துகாட்ட வேண்டும்.

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் நடைபெற்ற நாவலர் குருபூசை விழாவில் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகள் மேற்கண்டவாறு ஆசியுரை வழங்கினார்.

அருள்மொழி அரசி திருமதி வசந்தா வைத்தியநாதன் சிறப்புரையாற்றுகையில்,

நாவலர் பிறந்தது மக்களுக்குத் தொண்டு செய்யவே. தமிழ் மக்களின் பாரம்பரியங்களைக் கட்டிக்காத்து வளர்த்தவர் நாவலர். மாணவர்களின் கல்விக்கு வித்திட்டவரும் அவரே.

அவரை இப்போது அனேகமானோர் நினைப்பதில்லை. அவர் தொண்டினைத் தொடர்வதில்லை.

நன்றியுள்ள தமிழ் மக்கள் அவரின் பணியினைத் தொடரவேண்டும். தமிழிற்கும், சைவத்திற்கும் சேவையாற்ற வேண்டும்.

இப்படி அவர் கூறினார்.

திரு. ம. சிவராசா தொடக்கவுரை நிகழ்த்தி விழாவினை ஆரம்பித்து வைத்தார்.

திரு. மு. சிவராசா நன்றியுரை நிகழ்த்தினார்.

அன்னதானமும் வழங்கப்பட்டது.

### தமிழ் மகளிர் பேரவை

அறிஞர்களால் தான் ஒரு நாடு பெருமை அடைகிறது.

இதே போன்று நாவலர் பெருமானால் எமது யாழ்ப்பாணம் பெருமைப்பட்டுக் கொண்டிருக்கிறது.

'தமிழ் மகளிர்' அவை இடம் பெயர்ந்தோர் முகாமில் நடத்தப்பட்ட நாவலர் குருபூசை விழாவின் போது கலந்து கொண்ட வட பிராந்திய போக்குவரத்துச் சபைத் தலைவர் திரு. எஸ். கனகரத்தினம் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் அங்கு உரையாற்றுகையில்:-

நாவலர் அவதரித்த காலம் யாழ்ப்பாண மக்கள் உண்மை அறிவிழந்து அந்நியராட்சிக்கு அடிமைப்பட்டிருந்த காலம். இந்தச் சூழ்நிலையில்தான் நாவலர் பெருமான் சிந்தித்துச் செயலாற்றினார்.

சைவத்தையோ, தமிழரையோ தனித்தனியாக வளர்ப்பது இயலாதென்று கண்டு இரண்டையும் இணைத்து ஒன்றாகத் தானே வளர்த்துக் காட்டினார்.

இத்தகைய மகத்தானபணி புரிந்தபெருமானுடைய சேவையை தமிழ் மக்கள் என்றுமே மறக்கவேமுடியாது.

இவ்வாறு அவர் கூறினார்.

கம்பன் கழக அமைப்பாளர் இ. ஜெயராஜ் பேசுகையில், இன்று பேச்சுக்கள் மூலம் எதனையும் சாதிக்க முடியாது. பேச்சு என்கின்ற ஒன்று அவசியமில்லை. நாவலரின் பணியை எல்லோரும் வாசித்து அறிந்திருத்தல் வேண்டும்.

இப்படிப்பட்ட பெரியார்களின் பாதையை நீங்கள் கற்றுக்கொண்டீர்கள். ஆனால் உங்கள் வாழ்க்கை நன்றாக அமைய அவர்கள் வழி சமைப்பார்கள்.

துன்பங்களைக் கண்டு நாவலர் அஞ்சவில்லை. அதனை எதிர்த்து வெற்றி கண்டார். எந்தத் தமிழ் மகனும் இதனையே பின்பற்ற வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

திரு. எஸ். விஜயரத்தினம் நன்றியுரை கூறினார்.

நாவலர் நினைவாக முகாமிலுள்ளோருக்கு அன்னதானமும் வழங்கப்பட்டது.

யாழ்ப்பாண பாடசாலை கிரிக்கெட்

# 2 நாள் ஆட்டம் இல்லை

## இனி மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் போட்டிகளே

யாழ்ப்பாணம் டிச5

யாழ்ப்பாண பாடசாலை அணிகளுக்கு இடையிலான வருடாந்த சிநேகபூர்வ கிரிக்கெட் போட்டிகள் இரண்டு நாள் ஆட்டங்களாக நடைபெறமாட்டா.

ஒருநாள் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் ஓட்டமாகவே அவை அமையும்.

நேற்று யாழ். சென் ஜோன்ஸ் கல்லூரியில் நடைபெற்ற யாழ்ப்பாண பாடசாலைகள் கிரிக்கெட் சங்க கூட்டத்தில் இப்படி முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

எதிர்வரும் ஜனவரி மாதம் யாழ்ப்பாணத்தில் கிரிக்கெட் பருவகாலம் ஆரம்பமாகவிருப்பது தெரிந்ததே.

சிநேகபூர்வ ஆட்டங்களுக்குப் பதிலாக மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் சுற்றுப்போட்டி ஒன்றை இப்பருவ காலத்தில் நடத்துவதற்கு ஏற்கனவே திட்டமிடப்பட்டது.

எனினும் நேற்றைய கூட்டத்தில் இத்திட்டம் கைவிடப்பட்டதாகத் தெரிய வருகிறது.

நாட்டு நிலைமையை கவனத்தில் கொண்டு எதிர்வரும் பருவகாலத்தில் பாடசாலை அணிகள் தமக்கிடையே லீக் அடிப்படையில் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் ஆட்டங்களில் பங்குபற்றுவது என்றும்-

நிலைமையை அவதானித்து அடுத்தடுத்த வருடங்களில் நொக் அவுட் அடிப்படையில் சுற்றுப் போட்டியை நடத்துவது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

இதனை சங்கத்தின் சிரேஷ்ட அங்கத்தவர் ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார்.

லீக் அடிப்படையில் நடைபெறும் ஒரு நாள் ஆட்ட பெறுபேறுகளை கவனத்தில் கொண்டு சிறந்த வீரர்களை தெரிவு செய்து அவர்களுக்குப் பரிசு வழங்குவது என்றும் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

## விளையாட்டரங்கு

டெஸ்ட் தொடரிலும் 3-ஆவது டெஸ்டிலும்

# ஆஸ்திரேலிய அணி மண் கவ்வியது!

## சொந்த மண்ணிலேயே தோல்வி

பேர்த், டிச 5

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான மூன்றாவது டெஸ்ட் ஆட்டத்தில் நியூசிலாந்து அணி அபாரமாக விளையாடி வெற்றியை தனதாக்கிக் கொண்டது.

அதன் மூலம் ஆஸி கிரிக்கெட் சுற்றுலாவின் டெஸ்ட் தொடரிலும் வெற்றியைத் தன்வசப்படுத் தியிருக்கிறது நியூசிலாந்து அணி.

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடர் ஒன்றில்—அதுவும் ஆஸ்திரேலிய மண்ணில்—நியூசிலாந்து அணி வெற்றி பெற்றது இதுவே முதல்தடவை.

நியூசிலாந்து அணியின் பல்துறை வீரர் ரிச்சர்ட் ஹட்லியின் அபார ஆட்டமே அவ்வணி இத் தொடரில் அபார சாதனை புரிய காரணமாயிற்று.

நேற்று ஐந்தாம் (இறுதி) நாள் ஆட்டம் ஆரம்பமான போது ஆஸி. அணி இரண்டாவது இன்னிங்ஸ் துடுப்பாட்டத்தைத் தொடர்ந்தது.

7 விக்கெட் இழப்புக்கு 23" ஓட்டங்களைப் பெற்ற ஆஸி அணி நேற்றைய ஆட்டத்தின்போது சகல விக்கெட்டுக்களையும் இழந்து 259 ஓட்டங்களை மட்டுமே பெற்றது.

ரிச்சர்ட் ஹட்லி 90 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்டுக்களைவீழ்த்தினார்.

அவர் இந்தத் தொடரில் மொத்தம் 33 விக்கெட்டுக்களை வீழ்த்தியிருக்கிறார். இதன் மூலம் மூன்று டெஸ்ட் தொடரில் அதிக விக்கெட்டுக்களை வீழ்த்திய வீரர் என்ற சாதனையை அவர் நிலைநாட்டியிருக்கிறார்.

இதுவரை அவர் மொத்தம் 299 விக்கெட்டுக்களை வீழ்த்தியிருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

வெற்றி பெறுவதற்கு 164 ஓட்டங்களைப் பெற வேண்டிய நிலையில் இரண்டாவது இன்னிங்ஸ் துடுப்பாட்டத்தை ஆரம்பித்த நியூஸிலாந்து அணி அதனை 4 விக்கெட் இழப்புக்கு பெற்றுக் கொண்டது. அதனால் 6 விக்கெட்டுக்களினால் வெற்றியீட்டியது அவ்வணி.

ஓட்டங்களின் விபரம்:—ஆஸி அணி 203 259 ஓட்டங்கள். நியூஸிலாந்து அணி...299, 4 விக்கெட் இழப்புக்கு 164 ஓட்டங்கள்.

ரிச்சர்ட் ஹட்லி மூன்றாவது டெஸ்ட் ஆட்டத்தின் சிறப்பு வீரராகவும் டெஸ்ட் தொடரின் சிறப்பு வீரராகவும் தெரிவு செய்யப்பட்டார்.

## ஆட்டம் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம் டிச5

கொக்குவில் பொற்பதி ஐக்கிய விளையாட்டுக் கழகத்திற்கும் பாசையூர் சென் அன்ரனிஸ் விளையாட்டுக் கழகத்திற்கும் இடையே இன்று நடைபெறவிருந்த உதை பந்தாட்டப்போட்டி மழை காரணமாக ஒத்திவைக்கப்பட்டது.

யாழ் உதை பந்தாட்ட 'லீக்' நடாத்தும் 7 பேர் கொண்ட உதை பந்தாட்ட சுற்றுப் போட்டியின் ஒரு அங்கமாகவே மேற்படி ஆட்டம் நடைபெறவிருந்தது.

இந்த உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி இறுதிக் கட்டத்தை அடைந்திருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

## நச்சு வாயுக்கசிவு

இந்தியாவிலும் இலங்கையிலும் நச்சுவாயு கசிவு.

இலங்கையில் கொழும்பு சபுகஸ்கந்தை உரக்கூட்டுத்தாபன தொழிற்சாலையில் காஸ் சிலிண்டர் ஒன்றில் வெடிப்பு ஏற்பட்டது. இதனால் குளோரின் வாயு கசிந்து சூழலில் சேர்ந்ததால் 17 பேர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்கள்.

இதேவேளை இந்தியாவில் பழைய டில்லி வட்டாரத்தில் அமிலத் தொட்டி ஒன்றில் கசிவேற்பட்டதால் நச்சு வாயு வெளியேறியது.

இந்த சம்பவம் நேற்று நடைபெற்றது. இதனால் நேற்று பழைய டில்லி வட்டாரம் அல்லோல கல்லோலப் பட்டது.

இந்த நச்சுவாயுக் கசிவால் பாதிக்கப்பட்ட 53 பேர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

## காத்தான்குடி...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யாளம் காணப்பட்டது.

தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழ் இளைஞர் பேரவை ஆகியவற்றின் பிரமுகராக முன்னர் இவர் விளங்கினார். ஒரு குழந்தையின் தந்தை. சடலத்தின் மேல் அவர் செய்ததாகக் கூறப்படும் குற்றங்கள் அடங்கிய அட்டை காணப்பட்டது. அது மழையில் நனைந்ததன் காரணமாக அட்டையில் எழுதப்பட்டவை தெளிவாக இருக்கவில்லை.

பிற்பகல் 2.30 மணியளவில் உறவினர்கள் சடலத்தை மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் ஒப்படைத்தனர்.

இறந்தவரின் மனைவி சுப்புலட்சுமி சாட்சியம் அளித்தார்.

திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. த. சிவநாதன் மரணவிசாரணை நடத்தினார். கொலை என்று தீர்ப்பளிக்கப்பட்டது.

அச்சிடுவோரும் வெளியிடுவோரும்: நியூ உமா எக்ஸ்போர்ட்ஸ் லிமிட்டெட், 207, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். அச்சகம்: 15, 2ஆம் ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
வெளியிட்ட திகதி: 5-12-1985.